உ

முருகா

செந்திலாண்டவன் சேவடி துணை

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய

திருச்செந்தூர்

நிரோட்டக யமக அந்தாதி

விரிவுரை

உரையாசிரியர்:

குகஸ்ரீ ரசபதி அவர்கள்

சென்னை அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையாளர்

உயர்திரு. A. உத்தண்டராம் பிள்ளை, I. A. S.,

அவர்கள் வாழ்த்துரையுடன்

திருச்செந்தூர் ஆறுமுக சுவாமி

தேவஸ்தான வெளியீடு

1959

காப்பி 1000] [விலை 50 நயாபைசா

PRINTED AT THE
RATHNAM PRESS (BRANCH)
65, THIRUPPALLI STREET,
MADRAS-1

உ

முருகன் துணை

தமிழ்நாட்டு

அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையாளர்

உயர்திரு. அ. உத்தண்டராம் பிள்ளை, I. A. S.

அவர்கள்

வாழ்த்துரை

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சிவப்பிரகாச சுவாமிகள் என்ற பெரியார் தமது புலமையைப் பெருக்கிக் கொள்ளும் நோக்கத்துடன் திருநெல்வேலி சென்று வெள்ளியம்பலத் தம்பிரான் என்ற துறவியிடம் சீடராக அமைந்தார். அவருக்குக் குரு காணிக்கையாகப் பொருளைக் கொடுத்தபோது அவர் அதை ஏற்றுக் கொள்ள மறுத்தார்.

சிவப்பிரகாசர் அவரிடம் தன் தகுதிக்கு இசைந்தபொருள் யாது என்று வினவ, திருச்செந்தூரில் ஒரு போலிப் புலவன் தம்மை இகழ்ந்துகொண் டிருப்பதாகவும், அவனை வாதில் வென்று அடக்குவதே குரு தட்சணையாகும் என்றார்.

அவ்வண்ணமே சிவப்பிரகாசரும் திருச்செந்தூர் சென்று செந்திலாண்டவன் திருக்கோயிலில் முருகனைப் பாடி வழி பட்டுக் கொண்டிருக்கும்போது அங்குள்ள புலவன் இவரிடம் யாரென்று கேட்க, 'தாம் வெள்ளியம்பலத் தம்பிரானின் அடிப்புழுதி' என்று பதில் உரைத்தார்.

உடனே புலவன், 'அந்தப் புழுதி என் புலமைக் காற்றில் பறந்து போய்விடும்' என, 'அடிக்கீழ் உள்ள புழுதி, காற்றில் பறப்பதுண்டோ' என்று சொல்லி அவரை வாதுக்கு இழுத்து, உதடுகள் ஒட்டாமல் முப்பது பாடல்கள் அடங்கிய ஒரு பிரபந்தம் இயற்ற முற்பட்டார்.

புலவன் தொடங்கு முன்பே சிவப்பிரகாசர் முப்பது செய் யுட்கள் பாடி முடித்து விட்டார். புலவன் தோல்வியை ஒப்புக் கொண்டு அடிமையாகச் சித்தமானான். சிவப்பிரகாசர் அவரிடம்

'நீர் வெள்ளியம்பலத் தம்பிரானுக்கே அடிமை' என்று அந்த போலிப் புலவனை அழைத்துக் கொண்டு வெள்ளியம் பலத் தம்பிரானிடம் சேர்த்து அவன் கர்வத்தை யடக்கினர். சிவப்பிரகாசர் செய்த இந்தப் பிரபந்தம் 'திருச்செந்தில் நீரோட்டக யமக அந்தாதி' என்ற பெயருடன் விளங்குகிறது. 8–7–59ல் நடைபெறும் திருச்செந்திலாண்டவன் திருக்கோயில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக நன்னாளில் இந்த திவ்வியப் பிரபந்தத்தை, குகஸ்ரீ ரசபதியவர்களுடைய அரிய எளிய இனிய ஆராய்ச்சி உரையுடன் சென்னை ஸ்ரீபாலசுப்பிர மணியம் கம்பெனியார் மனமுவந்து வெளியிட ஏற்பாடு செய்திருப்பதை, சைவமக்கள் சார்பாகப் பெரிதும் பாராட்டு கிறேன். இதை எல்லா ஆஸ்திக மக்களும் படித்து இன்புறு வார்களாக.

கிரிவாய் விடுவிக் ரமவே லிறையோன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவா
லரிவா யடியோ டுமகந் தையையே.

—கந்தரனுபூதி

அ. உ.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முன்னுரை

அமுதினும் இனிக்கும் அருந்தமிழ் நாட்டில், இருந்த நெறி இரண்டு. ஒன்று, பொருளைக் காட்டும் அறநெறி. மற்றொன்று, அருளைக் காட்டும் தவநெறி. கருணை மிகுந்த காமாட்சியார், இந்த இரண்டையும் கச்சிப் பதியிற் காட்டினர்.

அறநெறியாளர், தவநெறியாளர்க்கு ஆதரவு காட்டினர். தவ நெறியாளர், அவர்களை உயர்ந்த உபதேசத்தால் உயர்த்தினர்,

பொருளாளரான திரு. அண்ணாமலை ரெட்டியார் வீரத் துறவி யான துறைமங்கலம் சிவப்பிரகாசர்க்குத் திருமடம் கட்டித் தந்தனர். இறுதிவரை, வாழ்க்கைக்குரிய பல வசதிகளை வழங்கினர். அதன் பயனாக, அவர் அடிகளிடம் பேறான உபதேசம் பல பெற்றார். பல நூற்களை, அவர் தூண்டியே அடிகள் அருளினர். உலகம் அவை களை, ஓதி இன்றும உய்கிறது

முனிவர் அருளிய முப்பத்திரண்டு நூற்களுள், இரண்டாவது நூல் திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி.

எந்த அந்தாதி நூற்களிலும், நூறு பாட்டுகள் இருக்கின்றன. இது மட்டும முப்பது பாடலில் முடிந்தது ஏன் ?

'உலகெலாம்' எனத் துவக்கிய பெரியபுராணம், 'உலகெலாம்' என நிறைவு பெறுகிறது. அதுபோல், அந்தாதி நூற்களின் முதற் பாட்டில் உள்ள முதற் சீரும், நூறாம் பாட்டின் இறுதிச் சீரும் ஒரு சொல்லா யிருக்கும். இது மண்டலித்தல் எனப் பெறும். அப்படி இந்நூல் மண்டலிக்கவில்லையே; காரணம் என்ன? என்று, இலக்கிய உலகில் என்றும் வினாக்கள் எழுகின்றன.

ஐந்திலக்கண அரியேறு ஆன சிவப்பிரகாசர், அந்தாதிப் பாடல் நூறு என்பதை அறியாரா? கலைக் கோயிலை மறந்த தமிழகம், பின்னிருந்த எழுபது பாடல்களை இழந்தது. உண்ணுமாறு கரை யானுக்கு உதவியது. அந்த எழுபதும் இருந்தால், மண்டலிக்கும் அந்த அருமையையும் கண்டிருக்கலாம்.

என்ன செய்வது? சைவத் திருமுறைகளில், எவ்வளவு பதிகங் களை இழந்தோம். இப்படி எத்தனை நூற்கள் மறைந்தனவோ? அறிவார் யார்? இவைகளை யெண்ணினாலும கண்ணீர் கலுழ்கிறதே! நூற்களை அச்சிற் பதிக்கத் தொடங்கிய நாள்முதல், இவ்வளவேனும் எஞ்சியதே என்று, ஒருவாறு அமைதியை யடைகிறோம். இவ்வளவு தான இங்குக் குறிக்க இயலும்.

நிரோட்டக யமக அந்தாதி, எளியேன் இளமையிற் பயின்ற நூற்களுள் ஒன்று.

பழுத்த துறவினர்; தமிழ் பழுத்த உளத்தினர்; சிவம் பழுத்த உணர்வினர் சிவப்பிரகாசர். இவர் செய்த எந்த நூலும், அற்புத கற்பனை, பொற்பலங்காரம், பொருட்சுவை, சொற்சுவை பொலிந்தவை.

மாணிக்கவாசகர் அருளிய திருக்கோவையார் அரச கோவை யெனில், இவர் செய்த திருவெங்கைக் கோவை, மந்திரி கோவை யென்று மதிக்கப்பெறும்.

'கொள்ளை கொள்ளை வீடுதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத்
தள்ளும் திருஞான சம்பந்தா!''

எனவரும் இவரது நால்வர் நான்மணிப் பாடல் ஒன்றைப் பாடிப்பாடி, பரவசம் எய்துவர் மாதவச் சிவஞான யோகிகள் என்பர்.

இத்துணைச் சிறந்த தவமுனிவர் நூற்கு, ஒன்றும் போதா எளியேன், உரையெழுத முயல்வது எவ்வளவு பெரும்பிழை என்பதை உணர்வேன். திருச்செந்தில் மகா கும்பாபிஷேக நிறைவு விழாவில், இந்நூல் வெளிவர வேண்டும் என்பது, தெய்வத் திருவுளமோ என்னே யாரறிவர்?

அன்று ஒரு அப்பர்; முறை துறை மறந்து தட்டுக் கெட்டுத் தடுமாறும் இன்றைய உலகில், அப்பரைப் பின்பற்றும் ஒரு அப்பர் இருக்கின்றார். அவர் உழவாரப் படையினர்; இவர், அதை என்றும் அண்மையில் வைத்து ஆராதிப்பவர். முழுமுதல் இறைவன் பெருமையை எண்ணும் திறம், எழுதும் திறம், ஏத்தும் திறம், பேசும் திறம் இவரிடம் பெருகி யிருத்தலை உணர்கிறேன். விவகாரத்தில் விறல்மிண்டர். அவர்கள் திருப்பெயர், உயர்திரு. A. உத்தண்டராம் பிள்ளை, I. A. S.

இந்த நாடு செய்த தவப்பயன் எனும்படி, இவர்கள் இன்றைய அறநிலயப் பாதுகாப்புத் துறை ஆணையாளராக இருக்கின்றார். தமிழ் நாட்டுக் கோயில்கள் முழுதும், இவர்கள் நினைவில் நிழலிடுவதை அறிவேன். வாய்த்த திருப்பணிகள், இவர்கள் முயற்சியால், வாய்ப்பாக எங்கும் வளர்கின்றன. அப் பெருந்தகையின் திருப்பணிகள் மேலும் பெருகி வளர அருள்க என, எம்மான் திருவருளை இறைஞ்சுகிறேன்.

அவர்கள் ஆணையின்படி, இந்த நிரோட்டக யமக அந்தாதிக்கு, உரையெனும் பெயரால், சிற்றிலிழைத்துச் சிறு தேர் உருட்டினேன்.

சென்னை கிடங்குத்தெரு, ஐவுளி வர்த்தகம் ஸ்ரீபாலசுப்ரமணயம் கம்பெனியார், திருப்பதி, பழனி, திருச்செந்தூர், கன்னியாகுமரி, இராமேஸ்வரம், சிதம்பரம், மதுரை, சுவாமிமலை, திருப்பரங்குன்றம் முதலிய ஒன்பது புனித திருப்பதிகளில் அதற்கான நெய், எண்ணெய்த் திட்டத்துடன் ஏற்றிவைத்த வெள்ளித் திருவிளக்குகள், என்றும் நிமல தெய்வ ஒளியை நினைவூட்டுகின்றன. டிசம்பர் 31ஆம் தேதியன்றும், ஜனவரி முதல் தேதி அன்றும் தணிகையில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கட்கு, இவர்கள் அன்னம் பாலிக்கும் அருமை, என்றும் எவரும் மறக்க இயல்வதில்லை.

திருமுருகன் பிள்ளைத் தமிழ்த் திரட்டு, வள்ளி நாயகி பிள்ளைத் தமிழ் முதலிய நூல்களை செந்திலில் வழங்கியவாறு, இக்கம்பெனியார், இன்று திருச்செந்தூரில் (8-7-59) அன்று நிகழ்ந்த அட்டபந்தன மகா கும்பாபிடேக காலத்தில், இந்நூலை வெளியிடுகின்றனர். எம்மான் திருவருளால், வாழ்க இவர்கள் என்று வாழ்த்துவோம்.

சென்னை இரத்தினம் (கினா) அச்சகத்தார் குறித்த காலத்தில், இந் நூலை அழகாகப் பதித்து அளித்தனர். அவர்கட்கு எம் நன்றி என்றும் உரியது.

இவ்வுரையில் கொள்ளத் தக்கவை யுளவேல், அவை திருவருள் உதவுதல்; தள்ளத் தக்கவை உளவேல், அவை அறிவினைத் தகையும் கருமல காரியம் என்று, உத்தம அறிஞர்கள் உணர்வர். உள்ள பிழையை உணர்த்துவர்; அடுத்துத் திருத்திக் கொள்வம் என்னும் நம்பிக்கை எற்குளது.

என்றும் இத்தகைய திருப்பணி எளியேற்கு நேர, வாய்ப்பான ஆசி வழங்குமாறு, மேலோர் பொன்னார் திருவடிகளைப் போற்று கின்றேன். வணக்கம். வாழ்க தமிழகம்.

திருச்செந்தில் ஆண்டவன் திருவடிகட்கே அடைக்கலம்.

ஓம்.

97, சஞ்ஜீவி ராயன் கோயில் வீதி,
பழைய வண்ணை,
சென்னை-21.

இங்ஙனம், அன்பர் தொண்டன்
ரசபதி.

உ

சிவப்பிரகாசர் வரலாற்றுச் சுருக்கம்

காணத் தக்கது காஞ்சிமா நகரம். அப்பதியில், வேளாண் மரபிற் கருதத்தக்கவர் குமாரசாமி தேசிகர். நல்லற இல்லறம் நடத்திய அவர்க்கு, நலம் சிறந்த மக்கள் நால்வர் பிறந்தனர். சிறந்த அம்மக்களுள் முதல்வர் சிவப்பிரகாசர்.

சிவப்பிரகாசர் கல்வியின் அருமையைக் கண்டவர். பரமனை இளமை தொட்டுப் பாடியவர்.

ஐந்து இலக்கண நுட்பங்களை, அறிய அவாவியது அவர் மனம்.

அதற்காக, சிறந்த திருநெல்வேலிக்குச் சென்றார். அங்கு தனிப்பெரும் வளத்தைத் தருகிறது தாமிரபரணி. அதன் துறைகளில் ஒன்று, சிந்து பூந்துறை. அதன் அண்மையில், தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த திருமடம் ஒன்று உண்டு. அங்கு அன்று வெள்ளியம்பலவாண சுவாமிகள், அதன் அதிபரா யிருந்தார். அச்சுவாமிகள், முத்தமிழ்க் கடலில் முழுகி எழுந்தவர்.

அச்செய்தியைச் சிவப்பிரகாசர் அறிந்தார். விரைந்தார். அவர் திருவடிகளில் வீழ்ந்தார். தம் வேட்கையை விண்ணப்பித்தார்.

தம்பிரான் ஸ்வாமிகள், சிவப்பிரகாசரது கல்வி யாழத்தைக் காண விரும்பினர்.

சிவப்பிரகாசம்! முதலிலும் கு; முடிவிலும் கு; இடையில் ஊருடையான்; இப்படி யமைய, பாடு ஒரு வெண்பா பார்க்க லாம என்றார். உடனே தங்கு தடையின்றிச் சிவப்பிரகாசர்,

'குடக்கோடு வானெயிறு கொண்டார்க்குக் கேழல்
முடக்கோடு முன்னமணி வார்க்கு—வடக்கோடு
தேருடையான் தெவ்வுக்குத் தில்லைத்தோல் மேற்கொள்ளல்
ஊருடையான் என்னு முலகு'

என்று பாடினர். பாடலின் அருமையை ஸ்வாமிகள் பார்த்து மகிழ்ந்தார். உடனே அவர்க்கு, ஐந்திலக்கண நுட்பம் அனைத்தையும் அறிவித்தார். கடல் நீர் பருகிய காளமேகம் போல், சிவப்பிரகாசர் அதன்பின் சிறந்து விளங்கினர்.

அதன்பின் அருமைத் திருச்செந்தூரை அடைந்தார். செவ்வேள் பெருமானைச் சேவித்தார். அவர் உள்ளம் பாகாய் உருகியது. அந்நிலையில் பாடியது இந்நூல்.

காயத்தை வருத்தும் காய்ச்சல் நோய். பாழும் அக் காய்ச்சல் பலவகை. அவைகளை விரட்டி யடிக்கும் வித்தக மருத்துவர், அன்றும் இருந்தனர்; இன்றும் பலர் இருக்கின்றார். ஆதலின், தகையும் அக்காய்ச்சலுக்குத் தப்பலாம்.

அவைகளை விட, பொல்லாதது புலவர் காய்ச்சல். அக் காய்ச்சலில் விழுந்தவர் என்றும் எழுந்திலர். தெய்வந்தான் அவர்களைத் தேற வைக்கும்; தெளிவிக்கும். என்றுமுள நிலையிது.

அவ்வரிசைகளில் இருந்தவர் ஒரு புலவர். அவர், வெள்ளி யம்பலவாணரை என்றும் வெறுத்தவர். அவர் மாணவரான சிவப்பிரகாசர் அருளிய திருச்செந்தி லந்தாதிதான், அப்புல வரைத் திருத்தியது.

திருந்திய புலவர், சிவப்பிரகாசருடன் புறப்பட்டார். தம்பிரான் சுவாமிகளை வணங்கினார். தங்கள் மாணவரால் அடியேற்குப் பெருகிய தெளிவு பிறந்தது. இன்று முதல் என் அழுக்காறு ஒழிந்தது; இதுவரை குழறிய என்மொழிகளை மறந்துவிட வேண்டுகிறேன் என்று மன்றாடினார். அவர் இவரை எடுத்து ஆசி கூறி யனுப்பினர்.

அதன்பின் சிவப்பிரகாசர் அங்கிருந்து புறப்பட்டார். தென்னாட்டுச் சிவதலங்கள் பல சேவித்தார். வாலிகண்ட புரத்திற்குத் தென்புரத்தில் கிராம அதிபதியா யிருந்த அண்ணாமலை ரெட்டியார் ஆதரவு பெற்று, அவர் கட்டிய மடத்தில், முழுத் துறவு தாங்கிய முனிவராய் இருந்தார். உல கிற்கு உபகாரமாக அவர் செய்த நூற்கள் முப்பத்திரண்டு. பலகாலம், பலர்க்கு உய்யும் வழிகளை உணர்த்தி யிருந்த சிவப் பிரகாச சுவாமிகள், தமது முப்பத்திரண்டாம் வயதில், நிறை நிலவன்று நிறைவு எய்தினர்.

வாழ்க சிவப்பிரகாசர் வளம்,

ஓம்.

திருமுருகன் தாள் இருமைக்கும் துணை.

திருச்செந்தில்
நிரோட்டக யமக அந்தாதி

இது, திருச்செந்திலினது நிரோட்ட யமக அந்தாதி என விரியும்; இஃது, ஆறும் வேற்றுமைப் பொருளில் தொக்கு நின்ற தொகைநிலைத் தொடர்மொழி. விஷயமாக வுடைமை, வேற்றுமைப் பொருளாகிய சம்பந்தம்.

இனி, இத் தொடர்மொழியை இரண்டனுருபும் பொருளும் உடன்தொக்க தொகையாகவும் கொள்ளலாம்.

திருச்செந்தில் என்பது, அருளுடைய ஆன்ம அடைக்கல நிலயம் எனும் பொருளது. (திரு - அருள்; செந்து - ஆன்மா; இல் - இல்லம்.) இத்தலப் பெருமையை,

"மறைகொழிக்கும் செயந்திபுரத்(து) எல்லைநீங்
காதிருந்து வாழும் மாந்தர்
குறைவில்தவச் செயலாளர்; அவர் புரியும்
தருமமொன்று கோடி யாமால்;
அறுமுகனைச் சேவைசெயும் கண்ணுடையார்,
கண்ணுடையார்; அன்னான் சீர்த்தி
முறையுரைக்கும் நன்றுவே நன்றுவென்
றேசுருதி மொழியும் மாதோ"

என்று, புராணம் இனிது புகல்கிறது

நிரோட்டகம் என்பது, நிர் ஓட்டகம் எனப்பிரியும்; ஓட்டகம் - உதடுகள்; நிர் ஓஷ்டகம் - உதடுகள் ஒட்டாது பாடுவது; "மீ கீழ் இதழுறப் ப ம பிறக்கும்" என்பது விதி. பகரம் மகரம் கலவாது பாடினால், அது, நிரோட்டகப் பாடலாகும். இது, மிறைக்கவி இனத்தைச் சேர்ந்தது.

பல அடிகளி லாயினும், ஓரடியில் பல இடங்களி லாயினும், வந்த எழுத்துத் தொடர்களே மீண்டும் வந்து பொருள் வேறுபடுவது, யமகம் எனப்பெறும்.

அந்தாதி - அந்தத்தை ஆதியாக வுடையது; அன் மொழித் தொகை. அந்த ஆதி எனப் பிரிக்க. அந்தாதியாவது - முன்னின்ற செய்யுளின் ஈற்றில் உள்ள எழுத்தாயினும், அசையாயினும், சீராயினும், அடியாயினும் அடுத்துவரும் செய்யுளின் முதலாக அமையும்படிப் பாடுவது. இங்ஙனம் பாடும் நூலினது ஈற்றுச் செய்யுளின் அந்தமே முதற் செய்யுளின் ஆதியாக அமைய வைத்தல், மண்டலித்தல் எனப் பெறும்.

உதடு ஒட்டாது பாடுதலால், ரேசக பூரக நிலை நேராக, வியக்கத் தக்க கும்பகம் விளையும்.

மேலும் இம் முப்பது பாடலும், கட்டளைக் கலித்துறையால் அமைந்தன.

ஆரம்பிப்பது நேரசை யாயின், ஒற்றை விலக்கி எண்ணில் பதினாறு எழுத்தாம். நிரையசை யாயின், அடிதோறும் பதினேழ் எழுத்தாம்.

"நேர் பதினாறே நிறை பதினேழே" என்பது விதி.

இந்த நியாயங்களால், இந்நூல் முழுதும் மந்திர சொரூபம் ஆகின்றது. இம் முப்பதையும் மனனம் செய்து, பயன் அடைந்தவர் இந்நாட்டில் பலருளர்.

காப்பு

காப்பு - காத்தல்; அது - இங்கு காக்கின்ற கடவுள் தொடர்பான வணக்கத்திற்குத் தொழிலாகு பெயர்; எனவே, கவி தமக்கு நேரத்தக்க இடையூறுகளை நீக்கி, தமது எண்ணத்தை முடிக்க இயல்வதோர் பொருளின் செய்தியாகச் செய்யும் துதி என்பது, கருத்து.

இக்காப்பு, தம்மைச் சரண் அடைந்தவர்கள் தொடங்கும் தொழில்கட்கு வரும் இடையூறுகளை, (விக்கினங்களை) ஒழித்தலாலும், தம்மை அடையாது அகங்கரித்தவர்கட்கு உபத்திரவ இடையூறுகளை உண்டாக்குதலாலும் விக்கினேச்சுரர் என்னும் திருநாமம் பெற்று உள்ளவரும், சிவபெருமானது மூத்த திருக்குமாரருமான விநாயகக் கடவுளைப் பற்றியது என அறிக.

திருச்செந்தில் ஆண்டவன் துணை.

நிரோட்டக யமக அந்தாதி

கட்டளைக் கலித்துறை.

காப்பு

கொற்ற வருணனை நின்றன் றுழக்கிய கொக்குருவைச்
[4]செற்ற [5]வருணனை யன்னசெவ் வேற்படைச் செந்திலர்க்கு
முற்ற வருணனை யந்தாதி யென்று முதிர்மதப்பேர்
பெற்ற வருணனை [6]யானனத் தாதியைப் பேசுவனே

(பதப்பிரிவு)

[1]கொற்ற வருணனை, நின்று அன்று[2]உழக்கிய[3]கொக்குஉருவைச்
[4]செற்ற, [5]அருணனை அன்ன செவ்வேல் படைச் செந்திலர்க்கு,
முற்ற வருணனை அந்தாதி, என்றும் முதிர்மதப்பேர்
பெற்ற, அருள்நனை [6]ஆனனத்து ஆதியைப் பேசுவனே!

(பதவுரை.) கொற்ற வருணனை - வெற்றியுடைய வருணனை; அன்று நின்று உழக்கிய கொக்கு உருவைச் செற்ற - (போர் புரிந்த) அந்நாளில், (கடலிடத்தில்) மாமரமாய் நின்று கலக்கிய (மாபெரும்) சூரபதுமனை வென்ற;

அருணனை அன்ன செவ்வேல் படைச் செந்திலர்க்கு - செஞ்ஞாயிறு போன்ற செவ்வொளி வேல் ஏந்திய செந்தில் செவ்வேள் பரனுக்கு;

வருணனை அந்தாதி முற்ற - வருணித்துக் கூறும் (இந்த) அந்தாதி (இனிது) நிறைவு பெற;

என்றும் முதிர்மதப் பேர் பெற்ற - என்றும் பெருகிய (கருணை) மதன் எனும் பெயர் பெற்ற;

அருள் நனை ஆனனத்து ஆதியைப் பேசுவனே - (தூய) அருளில் தோயும் யானைமுக முதல்வரை, (அடியேன்) துதிப்பேன், (என்றவாறு).

---

1. கொற்றம் - வெற்றி. 2. உழக்கிய - வருத்திய. 3. கொக்கு உருவை - மாமர உருவான சூரனை. 4. செற்ற - சிதைத்த. 5. அருணனை - சூரியனை. 6. ஆனனம் - திருமுகம்.

விரிவுரை

எண்திசைக் காவலருள், மேற்குதிசை அதிபன் வருணன். இவன் கடலின் அதிபன்; எவரும் வெல்ல இயலாத மாபெரும் ஆற்றலையுடையவன். அவுணருடன் முருகன் போர் தொடங்கிய அந்நாளில், சூரபன்மன் ஓடிக் கடலுள் ஒளித்தான். அதுமட்டுமா? கடல் நடுவில் மாமரமாகி, கடலையும், கடலதிபனை வருணனையும் கதிகலங்கச் செய்தான். அதையறிந்த செந்தில் ஆண்டவன் திருக்கை வேல், வீணர் தலைவனை நோக்கி விரைந்தது. செஞ்ஞாயிறு போல் பேரொளி பரப்பிச் சென்ற செவ்வேல், மாமரமாகி, பீதி விளைவித்தானைப் பிளந்தது. அதன்பின், செந்தில் பெருமான் திருக்கரத்தைச் சேர்ந்தது.

இவ்வரலாற்றால், இடர்தவிர்ப்பவன் வித்தகச் செந்திலான் என்பது விளங்குகிறது அல்லவா?

அந்தத் தற்பர இறைவனை எவ்வளவு வருணித்தாலும் தகும். பாடும்போது பயபக்தி வேண்டும்; அது கருதி உதடு ஒட்டாமல் பாட ஆவலித்தேன். அந்தமும் ஆதியும் இல்லாத அப்பரமன்மேல் பாடுவது, இனிய ஒரு அந்தாதியாக இருக்க வேண்டும் என்றும் எண்ணினேன். ஒவ்வொரு அடியினும் வந்த எழுத்துக்களே வந்து, வேறு பொருள் தந்து, ஊன்றி உணர்ந்தார்க்கு உவகையை விளைவிக்கும் யமகம் எனும் சொல்லணி பெறச் சொல்லவேண்டும் என்றும் கருதினேன்.

எல்லாம் வல்லானை, ஒன்றும் போதா எளிய என்னால், எண்ணிய வழியால் எல்லாம் பாடிவிட இயலுமா?

பாடும் ஆர்வமோ படபடக்கிறதே! பாட ஆரம்பிக்கும் அந்தாதி, இடையூறு ஒன்றும் அடையாதபடி, இடையிருந்து கா! பெருகிய அருள்மத கணபதீ! கா! கா! என்று பிரார்த்தித்தபடி.

இந்தக் கணபதி துதிமட்டும், நிரோட்டகம் அன்று; முதல் எழுத்து நீங்கலாக, இரண்டாம் எழுத்து முதல் பல எழுத்து ஓரடி போல் அமைந்த திருக்கு எனும் மிறைக்கவி இனத்தைச் சேர்ந்தது என்க.

1 யானைக்கண் டங்கரி சென்றேத் தெழிற்செந் தி லின்றடைந்தே
யானைக்கண் டங்கரி யற்கங் கயிலையை யேய்ந்ததகை
யானைக்கண் டங்கரி சேரெண்டிக் காக்கினற் கீநலிசை
யானைக்கண் டங்கரி தாகிய சீர்க்கதி யெய்தினனே

(பதப்பிரிவு)

யானைக்கண் தங்கு[1] அரி சென்று ஏத்து எழில் செந்தில், இன்று அடைந்தே
யான், [2] ஐ[3] கண்டம் கரியற்கு, அம் கயிலையை ஏய்ந்த [4] தகை
[5] ஆன் ஐக்கு, அண்டம்[6] கரிசேர் எண் திக்கு ஆக்கினர்க்கு, ஈநல்[7] இசை
யானைக் கண்டு, அங்கு அரிதாகிய சீர்க்கதி எய்தினனே !

(ப - ரை.) யானைக் கண் தங்கு அரி சென்று ஏத்து எழில் செந்தில் - வெள்ளை யானைமேல் வீற்றிருக்கும் இந்திரன் வந்து இறைஞ்சும் திருச்செந்தூர்க்கு ;

இன்று யான் அடைந்து - இன்று அடியேன் வந்து ;

ஐ கண்டம் கரியற்கு - அழகிய கழுத்து நீலமாக அமைந்த வர்க்கு ;

அம் கயிலையை ஏய்ந்த தகை ஆன் ஐக்கு - அழகிய (மாபெரும்) கயிலை மலைபோன்ற (பண்பும் நிறமும் படைத்து,) தகுதியுடைய விடையூரும் தலைவர்க்கு ;

அண்டம் கரி சேர் எண் திக்கு ஆக்கினர்க்கு - அண்டங் களையும், (எட்டு) யானைகள் சேர்ந்து காவல் செய்யும் எட்டுத்திசை களையும் படைத்த பரமர்க்கு ;

ஈ நல் இசையானைக் கண்டு - (ஓம் பொருள்) உதவிய சிறந்த புகழாளனைச் சேவித்து ;

அங்கு அரிதாகிய சீர்க்கதி எய்தினனே - அப்பதியில் (எவரும்) எய்த இயலாத பேரான கதியைப் பெற்றேன், (எ - று).

விரிவுரை

இந்திரன் பெருஞ் செல்வம் பெற்றவன் ; அதனால் அவனுக்குப் பிரபு என்று ஒரு பெயருளது. இந்திரப் பிரபு, செந்தில் பிரபுவை நாடோறும் வந்து சேவிக்கிறான. அதனால் அவன் பேறு அதிகரிக் கின்றது.

---

1. அரி - இந்திரன். 2 ஐ - அழகு. 3. கண்டம் கரியர் - நீலகண்டர். 4. தகை - தகுதியுடைய. 5. ஆன் ஐ - விடையூர் தலைவர். 6. கரி - யானை. 7. இசையான் - பெரும்புகழ் படைத்த செந்தில் பெருமான்.

உம்பர் உய்யச் சிவபிரான் விடம் உண்டார். உள்ளுக்கும் செல்லவில்லை; வெளியிலும் வந்து விழவில்லை; தனிப் பெரும் கண்டத்தில் அது, தடைப்பட்டு நின்றது. உண்ட உணவு தொண்டையில் அடைக்க, உயிருடன் உய்ந்தவர் உலகத்தில் இல்லை. சிவபிராற்கு, நீலவிடம் கண்டத்துள் நிற்கிறது; அதனால் அவர்க்கு நீலகண்டர் எனும் ஒரு திருநாமம் நிலைத்தது. இவ்வரலாற்றால், இறவார் பிறவார் சிவபெருமான் என்று அறிவோம். அவ்வளவுதானா?

தரும சொரூபம், அவர் ஊரும் தனிவிடை. அது வெள்ளி மலை போல் விளங்குகின்றதே! வெள்ளிமலை விமலரைப் பிரிவதில்லை; அதுபோல் அவ்விடையும், அமலர்க்கு அயலாவது இல்லை. ஆ! என்ன அருமை!

எட்டுத் திசைகளையும் படைத்து, அத் திசைகளைத் தாங்க எட்டு யானைகளையும் படைத்து, நிலவுலகை அன்றும் இன்றும் என்றும் புரப்பவர் அந்த அத்தர்.

செந்தில் செல்வரை, சிறந்த சிவபிரானும் சேவித்தார். வானை இந்திரற்கு வழங்கிய கந்தன், ஓம் பொருளைச் சிவனார்க்கு உதவினன். அரிய இந்த அருமைகளை அறிந்தேன். செந்திலுக்கு வந்தேன். செவ்வேள் பரனைச் சேவித்தேன். எவரும் பெறுதற்கு அரிய பயனைப் பெற்றேன். நெஞ்சம் இதனை எண்ணும் போதே நெகிழ்கிறதே! என்பது கருத்து.

'எய்தினனே' என்னும் சீரை, எண்ணும் போதே நம் உள்ளம் பாகாய் உருகுகின்றதே. (1)

2 தினகர னந்த நனியிலங் காநின்ற செய்யநற்செந்
தினகர னந்த நிதியா யினனடற் சீரயிலேந்
தினகர னந்த கனைச்செற்ற தாளர் திகழ்கனகா
தினகர னந்த நடனர் தனயனென் சிந்தையனே

(பதப்பிரிவு)

[1]தினகரன் [2]நந்த, நனி இலங்கா நின்ற செய்ய நல்செந்
தில் நகரன்; நம்தம் நிதியாயினன்; அடல்சீர் அயில் ஏந்
தின கரன்; அந்தகனைச் செற்றதாளர், திகழ்கன கா
தில் நகர் அனந்த நடனர் தனயன், என் சிந்தையனே.

(ப - ரை.) தினகரன் நந்த - பரிதி ஒளி மழுங்கும்படி,

1. தினகரன் - சூரியன். 2. நந்த - ஒளி மழுங்க.

நனி இலங்கர் நின்ற செய்ய செந்தில் நகரன் - மிக்கு விளங்கு கின்ற சிறந்த (மாபெரும்) திருச்செந்தில் மன்னன் ;

நம்தம் நிதி ஆயினன் - நம்முடைய உரிமைச் செல்வமாக உயர்ந் தவன் ;

அடல் சீர் அயில் ஏந்தின கரன் - வெல்லும் சிறப்புடைய வேல் ஏந்திய திருக்கரத்தன் ;

அந்தகனைச் செற்ற தாளர் - (அகக்கண் அற்ற) இயமனை உதைத்த திருவடியை யுடையவரும்,

திகழ் கன காதில் நகர் அனந்த நடனர் தனயன் - (முக்காலத் தும்) விளங்குகிற (உயர்) திருச் செவி அணி ஊசல் ஆட, பலவகைத் தாண்டவம் செய்பவருமான பரமன் குமாரனுன பரன் ;

என் சிந்தையனே - என் மனத்தில் (எப்போதும்) இருக்கின் றனே, (எ - று).

விரிவுரை

தினத்தைச் செய்தலால், சூரியன் தினகரன் எனும் பெயரை எய்தினன்.

'சதகோடி சூரியர்கள் உதயமென, யுகமுடிவின் இருளகல ஒரு சோதி வீசும்'

செந்திலான் திருமுன், சூரியன் ஒளி குன்றுவது இயல்பு. 'பிரம மாய் நின்ற சோதிப் பிழம்பான' பெருமான் திருமுன், எழும் பரிதி ஒளி நிற்க இயலுமோ? இலங்கா நின்ற எனும் அடை நகர்க்கும், நகர் வாழ்நர்க்கும், நகர அதிபரான நம்பர்க்கும் உரியதாகி உயர்ந் திருக்கின்றது. உயிர்த் தொகுதிகளின் சொந்த வீடு செந்தில் ; ஆன் மக் குடிகளை அணைக்கும் அரசர் செந்தில் ஆண்டவர்.

போலிச் செல்வம் யாவும் போய்த் தொலையும் ; இதய குகையில் இருக்கும் இயற்கைச் செல்வர், செந்தில் அதிபர் ; எனவே நம் சொந்தச் செல்வர் செந்தில் செம்மல்.

ஆணவ இருளை அகற்றி, மாயா மலத்தை மாய்த்து, கன்ம மலக் கட்டறுக்கும் ஞானவேல், அவர் திருக்கரத்திருக்கும் தெய்வ வேல்.

அருளாளரை முதலில் அறியான் ஆதலின், இயமன் அந்தகன் ஆகிறுன். அக்காலனை, அவசியம் நேரும் போதெல்லாம், அடர்க்கும் ஆண்மைத் திருவடியர் சிவபிரான்.

காலனை உதைக்கும் காலர்; கன அணி அணியும் காதர்; பல் வகைப் பயன் விளைய, பலவகைத் தாண்டவம் செய்யும் அப்பரமர் தனயன் செந்தில் பரன்.

இத்துணைச் சிறந்த திருச்செந்தில் எம்மான், எம் சிந்தையில் எப்போதும் இருக்கின்றான்; ஆதலின், எனக்கு ஒரு குறையும் இல்லை என்பது கருத்து.

காதில் அனந்தன் நகர் நடனர் என இயைத்து - திருச்செவியில் அனந்தன் ஆகிய அணி அசைய ஆடுவார் எனலும் ஆம். அனந்தன் - ஆதிசேடன்.

எங்கள் மன்னன்; எங்கள் செல்வன்; எங்கள் ஞானவேலன் எப்போதும் என் மனத்தில் இருக்கின்றானே எனும் பகுதியை, ஓதுவார் உள்ளம் உருகாதோ? ஓம். 2

3 சிந்தனை யாகத் திசையந் தணர்க்கிறை சேரகங்க
சிந்தனை யாகத் தரையளித் தாடரை சென்றிரந்த
சிந்தனை யாகத் திடையியைந் தான்றந்த சேயளியாற்
சிந்தனை யாகத்த நற்செந்தி லாய்நினைச் சேர்ந்தனனே.

(பதப்பிரிவு)

சிந்தனை [1]யாகத்து இசை அந்தணர்க்கு இறை; சேர் [2]அகம்க
சிந்து, [3]அனை ஆகத் [4]தரை அளித்தாள், தரைசென்று இரந்த
[5]சிந்தனை, [6]ஆகத்து இடை இயைந்தான் தந்தசேய்! அளியால்
[7]சிந்து அனையா! [8]கத்த! நற்செந்திலாய்! நினைச் சேர்ந்தனனே.

(ப - ரை.) சிந்தனை யாகத்து இசை அந்தணர்க்கு இறை - மனத்தை வேள்வியில் வைத்த அந்தணர் பெரும!;

சேர் அகம் க்சிந்து அனை ஆகத் தரை அளித்தாள் - (கனிவு பொருந்திய) திருவுள்ளக் கசிவு காட்டும் தாயாக உலகை உதவிய உமா தேவியையும்;

சென்று தரை இரந்த சிந்தனை - மாவலியிடம் சென்று (மூவடி) மண் யாசித்த வாமனரான திருமாலையும்;

---

1. யாகத்து - வேள்வியில். 2. அகம் - உள்ளம். 3. அனை - அன்னை; இடைக் குறை. 4. தரை - நிலவுலகம். 5. சிந்தனை - குள்ளமாக வந்த திருமாலை; சிந்தன் - குள்ளன். 6. ஆகத்து - திருமேனியில். 7. சிந்து அனையா - கடல் போல்பவனே; 8. கத்தா - அதிபா.

ஆகத்து இடை இயைந்தான் சேய் - திருமேனியின் இடத்திலும் வலத்திலும் இயையக் கொண்ட சிவனார் குமரா !;

அளியால் சிந்து அனையா - கடல்போல் பெருகிய கருணையனே !;

கத்த - எவர்க்கும் இறைவா !;

நல் செந்திலாய் - சிறந்த செந்தூர்ச் செம்மலே !;

நினைச் சேர்ந்தனனே - (அடியேன்) உம்மைப் (புகலாக) அடைந்தேன், (எ - று).

விரிவுரை

'அந்தண் மறை வேள்வி காவல்காரா !' என்றார் அருணகிரி நாதர். வேள்வியாய், வேள்விப் பயனுமான விமலன், அவ்வேள் வியை நடத்துவாரை முன்னிருந்து நடத்துகின்றான்.

கந்தனை எண்ணுவாரில் கனல் எழுகிறது. அந்த ஞானக் கனல் நடுவில் இருந்து, ஏத்துவாரைக் கைகொடுத்துத் திருவடி நிழலில் இருத்துகின்ற பெருமானை, 'அந்தணர்க்கு இறை' என்று ஓதும்போதே நாவில் நீர் ஊறுகின்றதே !

செந்தண்மை பூண்டொழுகும் அந்த அந்தணரே, வழிகாட்டி எவரையும் வாழ்விக்கும் பெருமக்கள்.

உயிர்கட்குப் பிறவி தீர, உலகை யளித்தாள் உமாதேவி; அவ்வுலகில், இருந்து தவம் செய்வார்க்கு இடர்ப்பாடு அளித்தான் மாவலி.

கள்ளனாய் நிலம் கவர்ந்த மாவலிமுன், குள்ளராய் வந்த திருமால், தவவேள்வி நடத்த, மூன்றடி மண் தா எனறார்.

கொடுத்தேன் என்றான் முன், வளர்ந்து, வானுற நீட்டிய திருவடியால் மேல்ஏழு அளந்து, ஆழவிட்ட திருவடியால் கீழ்ஏழும் அளந்து, இரண்டடி அளந்தேன்; மூன்றாவது அடிக்கு இடம் எங்கே? என்றார் முகுந்தர்.

தானே உண்டு தருதற்கு என்று, தலை தாழ்த்தினான் மாவலி. தாளை அவன் தலையிலிட்டு, ஆழமான பாதலத்தில் அவனை ஆழ்த்தி வாழ்த்தி, தரணியை மீட்டார் அத் தாமோதரர்.

இப்படித் தரையளித்தாள் தாய்; அத்தரையை காத்தார் திருமால். உலகுய்ய வழிசெய்த நீவிர் இருவரும், இனி எம்பால் இரும் என்று, தம் திருமேனியின் இருபுறமும் அவர்களைத் தழுவி நின்றனர் தற்பரர்.

திருச்செந்தில் செல்வமே! நீ அந்தப் பரம்பரையில் வந்தவன் அல்லவா! கருணைக் கடலே! அவுண உணர்வினரை அடக்கி, அகில உலகையும் அணைத்தாய்; கருணைக் கடலான உன்னையே கதி என்று அடைந்தேன் என்றபடி.

இறையே! சேயே! அருட்கடலே! செந்திலாய் என்று வீரிட்டுக் கூவி விளித்தபடியே, அரிய நினை யடைந்தேன் எனும் இதனை எண்ணும் போதே, செந்திலான் சந்நிதியில் நெஞ்சம் சேர்கிறதே! (3)

4 தனத்தலங் கார நிறைநா ரியரந் தரத்தசைகே
தனத்தலங் கார நிகழரங் காடச்செய் தன்னினயத்
தனத்தலங் கார தராயியங் கத்தக்க தண்செந்திற்கந்
தனத்தலங் காரனை யானய னேத்திடத் தங்கினனே

(பதப்பிரிவு)

தனத்து [1]அலங்கு ஆரம் நிறை நாரியர், [2]அந்தரத்து அசை, [3]கேதனத்து அலங்காரம் நிகழ் [4]அரங்கு ஆட; [5]செய் தன்னின் நயத்து, [6]நத்து, [7]அலம் [8]கார் அதராய் இயங்கத் தக்க, தண் செந்தில் கந்தன், அத்தலம் [9]கார் அனையான், அயன் ஏத்திடத் தங்கினனே.

(ப - ரை.) தனத்து அலங்கு ஆரம் நிறை நாரியர் - குயங்களின் மேல், குலவிய முத்தாரம் நிறைய அணிந்த நேரிழையர்;

அந்தரத்து அசை கேதனத்து அலங்காரம் நிகழ் அரங்கு ஆட - வானில் அசையும் கொடிகளை யுடைய அழகு விளங்கும் அவையில் ஆடவும்;

செய் தன்னில் நயத்து நத்து - (சார்ந்த) வயல்களில் நயமான சங்குகள்;

அலம் கார் அதராய் இயங்கத் தக்க தண் செந்தில் கந்தன் - கலப்பையின் (உழுபடைச் சாலில் உள்ள) நீரின் வழியே ஊர்ந்து செலும் தகுதியுடைய, குளிர்ந்த வளமுள்ள செந்தில் பதியில் சேர்ந்திருக்கும் (வரத) கந்தன்;

அத்தலம் கார் அனையான் - அத்தலத்தில் உள்ள முகில் வண்ணத் திருமாலும்;

---

1. அலங்கு-அசைகிற; அல்லது பளபளக்கின்ற. 2. அந்தரத்து - விண்ணில். 3. கேதனம் - கொடி. 4. அரங்கு - நடன சபை. 5. செய்-வயல். 6. நத்து - சங்குகள். 7. அலம் - கலப்பை. 8. கார் அதராய் - நீர் வழியே. 9. கார் அனையான் - மேகவண்ண நாரணன்.

அயன் ஏத்திடத் தங்கினனே - (அத்திருமால்) மைந்தனான நான்முகனும், (இனிது) போற்ற எழுந்தருளி யிருக்கின்றான், (எ-று).

விரிவுரை

எங்கும் நடன அரங்குகள் இருக்கின்றன. கொடி பறக்கும் அவைகளில், அரிவையர் பரத நடனம் ஆடுகிறார்கள். முத்துக்களை யீனும் சங்குகள், வயல்களில் சஞ்சரிக்கின்றன. தட்ப மகிழ்ச்சி நிறைந்த அத்தலத்தில், படைப்பானும் காப்பானும் வாழ்த்தி வழி பட, எம்மான் கந்தன் மகிழ்ந்து இருக்கின்றான் என்றபடி.

ஏத்துவார் ஏத்த எம்மான் எழுந்தருளி இருக்கும் இடம், என்றும் வளத்தது என்பதை, எண்ணுவார் உள்ளம் இன்பம் கொள்ளும். அலம் - கலப்பை; ஆகு பெயர். (4)

6 தங்கந் தனங்க ளடையத் தனியெனைத் தள்ளியங்கே
தங்கந் தனங்க டரச்சென் றனரறிந் தாரிலைகா
தங்கந் தனங்க ளலர்காக்க ணாரெழிற் றண்செந்திலார்
தங்கந் தனங்க நிகர்செக்கர் செய்சஞ் சலத்தினையே

(பதப்பிரிவு)

[1] தங்கம் [2] தனங்கள் அடையத் தனிஎனைத் தள்ளி, அங்கே
தங்கு அம் [3] தனங்கள் தரச்சென்றனர், அறிந்தார் இலை;கா
தம்[4] கந்தம் நம்[5] கள்அலர் [6] காக்கண்,ஆர் எழில் தண் செந்திலார்
தம்கந்தன், [7] அங்கம் நிகர் [8] செக்கர் செய் சஞ்சலத்தினையே.

(ப . ரை.) தங்கம் தனங்கள் அடைய தனி எனைத் தள்ளி - பொன்போலும் தேமலை (என்) குயங்கள் பொருந்தும்படி, என்னைப் பிரிந்து ;

அங்கே தங்கும் அம் தனங்கள் தரச் சென்றனர்-(தாம்சென்ற) அந்த இடத்தில் இருக்கும் செல்வத்தைக் கொண்டு வரச் சென்ற என் தலைவர் ;

காதம் கந்தம் - காத தூரம் மணம் (பரப்பி);

கள் அலர் காக்கண் - (புதுத்) தேன் பொருந்திய பூக்கள் மலரும் பூங்காவனங்களின் இடத்தில்,

1. தங்கம் - தங்க நிறமான தேமல். 2. தனங்கள் - குயங்கள். 3. தனங்கள் - பொருட் செல்வம். 4. கந்தம் - மணம். 5. கள் அலர் - தேனையுடைய மலர்கள். 6. காக்கண் - சோலையில். 7. அங்கம் - திருவுருவம். 8. செக்கர் - செவ்வானம்.

ஆர் எழில் தண் நம் செந்திலார்தம் கந்தன் அங்கம் நிகர் - நிறைந்த அழகிய குளிர்ச்சி அமைந்த நம் திருச்செந்தூரில் இருப்பவர்களது, (கனத்த செல்வமான) கந்தப் பெருமானது திருமேனி போலும்,

செக்கர் செய் சஞ்சலத்தினையே அறிந்தார் இலை - செவ்வானம் (எளியேற்குச்) செய்யும் அருந்துன்பத்தை(ச் சற்றும்) அறிந்தார் இல்லையே, (எ - று).

விரிவுரை

நம் செந்திலார்தம் கந்தன், செக்கர் செய் சஞ்சலத்தினை அறிந்தாரிலை எனக் கூட்டுக. இது, மாலைப் பொழுது கண்டு இரங்கல் என்னும் துறை.

வந்தார். மணந்தார். வாழ்வளித்தார். வாழ்க்கைக்குச் செல்வம் தேவை. அதைச் சேகரித்துக் கொண்டு, விரைந்து வருகிறேன் என்று பிரிந்தார்.

எனக்குச் செல்வர் அவர். அவருக்குச் செல்வி நான். அவர் ஏன் இதை யறியவில்லை ?

அவர் திருமேனி நிறம்போல், மேல் திசை வானம் சிவந்ததே! மாலைப் பொழுது கண்டு இரங்கும் என் மனவேதனையை, செந்தில் கந்தர் அறிந்தார் இல்லையே! அறிந்தாராயின், உடனே வந்து, மாறா என் கவலையை மாற்றி யிருப்பரே என்று தலைவி வருந்தியபடி.

தோத்திரப் பிரபந்தங்களில், அகப்பொருள் களவித் துறைகளை இடையிடை கூறுதல் கவிமரபு. அத் துறைகளை ஞான நூலிற் கூறுதல், மருந்து உண்ண மறுத்தாற்கு அம் மருந்தின் மேல் வெல்லம் இட்டு உண்பிப்பார்போல், சிற்றின்பம் கூறும் வகையால், பேரின்பம் காட்டி நாட்டுதல் பெரியோர் மரபு.

இங்ஙனம் வெளிப்படையாகக் கூறும் சிற்றின்பத் துறைச் செய்யுள்கட்கு, பேரின்பத்தின்பாற் படுத்தும் உள்ளுறைப் பொருளும் உண்டு.

இத் துறைகளை அந்யாபதேசம் என்பதும், உள்ளுறைப் பொருளை ஸ்வாபதேசம் என்பதும் வடநூல் மரபு.

கந்தர்க்கு ஸர்வகந்தன் என்று ஒரு பெயருண்டு. முழு மணத்தன் என்பது அப்பெயர்ப் பொருள். முருகு - மணம்; முருகன் - மணமகன் ; மரா மரா என்பது ராம ராம என்று ஆதல் போலவும், வாசி வாசி என்பது சிவா சிவா என்று ஆதல் போலவும், முருகா முருகா என்று தொடர்ந்து ஓத, அது ஒலி வகையால் காமுறு காமுறு என ஒலித்தலை ஓதி உணர ஒருமை வரும்.

செந்தில் என்பது ஆன்மா சென்று தங்கும் இடம்; அங்கிருப்பவன் கந்தன். அவன் மணமகன்; அழகனான அவனை உத்தம ஆன்மா காமிக்கும். அவன் கூட்டுறவை மேன்மேலும் அவாவும். அந்த அவாவால், பேரின்பக் காதலை யடையும். இது அன்பைச் செலுத்த வேண்டிய இடத்தில் செலுத்தியது ஆதலால், சிற்றின்பக் காதல்போலன்றி, சகல பாவ நிவாரணத்திற்கும், ஆகாமிய வினை தோன்றாமைக்கும், வீடு பேற்றிற்குமே காரணமாம் என்பது கருதத் தகுவது. 5

6 சலந்தர னாகந் தரித்தார்தந் தாதன் றனதிடைச்சஞ்
சலந்தர னாகந் தரைநடந் தாலெனச் சார்ந்ததண்டன்
சலந்தர னாகந் தளரச்செற் றார்தன யன்றலநச்
சலந்தர னாகந் தனக்கிறை சேர்செந்திற் சார்ந்திடற்கே

(பதப்பிரிவு)

[1]சலம் [2]தரம் [3]நாகம் தரித்தார், தம் [4]தாதன் தனதிடை, சஞ்
சலம்தர, [5]நாகம் தரைநடந்தால் எனச் சார்ந்த [6]தண்டன்,
சலந்தரன் ஆகம் தளரச் [7]செற்றார் தனயன, தல[8]நச்
சலம்; [9]தரம் [10]நாகந்தனக்கு இறைசேர் செந்தில் சார்ந்திடற்கே.

(ப - ரை.) சலம் - கங்கையையும்; தரம் - தலை மாலையையும்; நாகம் தரித்தார் - அரவையும் (அணிகலன்களாக) அணிந்தவரும்;

தம் தாதன் தனது இடை சஞ்சலம் தர - தமது தொண்டரான மார்க்கண்டேயர் இடத்தில் (பொல்லாத்) துன்பம் விளைவித்தற் பொருட்டு,

நாகம் தரை நடந்தால் எனச் சார்ந்த தண்டன் - (தருக்குடன் மத) யானை ஒன்று தரையில் நடந்தாற்போல் (இறுமாந்து) வந்த இயமனையும்,

சலந்தரன் ஆகம் தளரச் செற்றார் தனயன் - சலந்தரனையும், ஆக்கை அயர்வடைய அழித்த சிவனார் குமாரரும்;

---

1. சலம் - கங்கை. 2. தரம் - தலைமாலை. 3. நாகம் - பாம்புகள். 4. தாதன் - தாசரான மார்க்கண்டேயர். 5. நாகம் - மதயானை. 6. தண்டன் - தண்டம் தரும் இயமன். 7. செற்றார் - சிதைத்த சிவபிரான். 8. நச்சலம் - விரும்பிலம். 9. தரம் - தகுதி. 10. நாகந்தனக்கு - மலைகட்கு.

தரம் நாகந்தனக்கு இறைசேர் செந்தில் - தகுதி யுடைய மலை கட்குத் தலைவராகியும் இருக்கின்ற கந்தப் பரமர் எழுந்தருளியிருக் கும் திருச்செந்தில் எனும (வித்தகத்) தலத்தை ;

சார்வதற்கே நச்சலம்-அடைய விரும்பினோம் இல்லையே, (எ-று).

விரிவுரை

கப்பீரமானது கங்கை ; எத்தனையோ பிரமர்களின் தலை மாலை, பரம குண்டலினிப் பாம்புகள் முதலியவைகளை, தனிப்பெரும் அணி கலனாகத் தரித்தவர் தற்பரர்.

அவரது மாபெரும் தொண்டர் மார்க்கண்டேயர். பக்தரான அவரை இயமன் பற்ற வந்தான்.

அவனைப் போலவே சாதுக்களைப் பாதித்தவன் சலந்தர அசுரன். அவனையும் இவனையும் அயரச் செய்த சிவபிரான், துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனர்.

அவர் தனயன் கந்தப் பிரான். தமது வேர்களால் நிலத்தைத் தாங்கும் மலைநில மன்னன் அப்பெருமான். தாங்குவான் தலத் தைச் சார்ந்தால், துன்பம் துடைக்கலாம் ; இறவாப் பிறவாத் தன்மை எய்தலாம் ; ஆ ! அந்த வித்தகச் செந்திலைச் சார, இது வரை விரும்பிலம் ; என்னே நம் மதி யிருந்தவாறு என்றபடி.

நாகம் - நகத்தில் வாழ்வது எனும் காரணக் குறி. நாகம் - மலையும் மரமுமாம். தாதன் - தாசன் ; அடியான் என்பது குறிப்பு. அடுத்த நாகம், மலை எனும் பொருளில் நின்றது. நாகம் தளர நடத்தல், இல்பொருள் உவமை. தோற்றமும் வலியும் கருதி, இயமனை மலை என்றார். தண்டன் - தண்டு எனும் படையை ஏந்தி யவன். மலைபோல் வந்தான் இயமன். மலைநிலங்கட் கெல்லாம் அதிபன் முருகன். எனவே, அப் பெருமான் தலம் சாரின், இயமன் அஞ்சுவன் ; உமாபதியிடம் பட்ட உதையும் அவனது நினைவில் எழுந்து நிற்கும் அல்லவா !

இறைக்குப் பகுதி இறு ; எங்கும் தங்கல் என்பது பொருள். வியாபக விமலன் செந்திலான். செந்து எனும் ஆன்மாவின் சொந்த இடமாதலின், அங்குச் சார்ந்தால் அபாயம் இல்லை. இவை களை யெல்லாம் எண்ணும் இயமன், செந்திலைச் சார்ந்தார் முன் சாரான் என்பது குறிப்பு. (6)

7 சாரங்கஞ் சங்கரி கட்கிச்சித் தேய்ந்தகைச் சங்கரனார்
சாரங்கஞ் சங்கரி தாஞ்சக் கரங்கையிற் றாங்கினன்சேய்
சாரங்கஞ் சங்கரி யாநண் ணினர்க்கந்தத் தந்திரத்தா
சாரங்கஞ் சங்கரி தேயெனச் செய்நின் சரண்டந்ததே

(பதப்பிரிவு)

[1]சாரங்கம் சங்கரி[2]கட்கு இச்சித்து ஏய்ந்த கைச் சங்கரனார்,
[3]சாரங்கம், சங்கு, அரி தாம் சக்கரம், கையில் தாங்கினன்[4]சேய்
சார்[5]அங்கம் சங்கரியா நண்ணினர்க்கு, அந்தத் தந்திரத்து ஆ
சாரம், [6]கஞ்சம் கரிதே எனச்செய் நின சரண் தந்ததே!

(ப . ரை.) *சாரங்கம்* - (ஒரு) மானனது;

சங்கரி கட்கு இச்சித்து ஏய்ந்த கைச் சங்கரனார் - உமா தேவியின் கண்ணழகு காண விரும்பி வந்து இருந்தாற் போல, (அந்த மான் ஏந்திய இடது) திருக்கரத்தை யுடைய இறைவரும்;

சாரங்கம் - சார்ங்கம் என்னும் வில்லும்;

சங்கு - பாஞ்ச சன்யம் எனும் சங்கும்;

அரி தாம் சக்கரம் - அருமையான ஆழி முதலியவற்றையும்;

கையில் தாங்கினன் சேய் சார் அங்கம் - திருக்கரத்தில் கொண்ட திருமாலின மைந்தனை மன்மதன உடலை;

சங்கரியா நண்ணினர்க்கு - எரித்துப் பொடிபடுத்தி, (ஒன்றும் அறியார்போல் யோக நிலையில்) இருந்தவரான சிவபெருமானுக்கு;

அந்தத் தந்திரத்து ஆசாரம் - (சிறந்த) அந்த சிவாகம சீலத்தை;

கஞ்சம் கரிதே எனச் செய் நின் சரண் தந்ததே - (சிவந்த) கமல மலரையும், கருநிறமாக (நாணச்) செய்யும் உமது திருவடி மலர்கள் உதவின, (எ - று).

விரிவுரை

இடது பாகத்தில் உமாதேவி. சிவனார் இடது திருக்கரத்தில் மான் ஏந்தியுளர். பார்த்த கண் வாங்காது தேவியை மான் பார்த்தபடியே இருக்கிறது. மருளும் மான் நோக்கினர் மாதர் என்பர். உமையின் கண்கள் உவமை கடந்தவை. மீனாட்சி, மானாட்சி, காமாட்சி, விசாலாட்சியெனும் இந்தத் தேவியின் கருணைக் கண்களே

---

1. சாரங்கம் - மான்; வடசொல். 2. கட்கு - கண்ணிற்கு. 3. சாரங்கம் - வில்; 4. சேய் - மன்மதன். 5. அங்கம் - தேகம். 6. கஞ்சம் - செந்தாமரை.

கண்கள்; அதைக் கண்டு மகிழாத கண்களே புண்கள் என்று, அந்த மான் என்ன எண்ணுகிறதோ அறிவார்கள் யார்? விமலையின் கண்களைக் காண விரும்பி, சிவனார் திருக்கரத்திற் சேர்ந்திருக்கிறதோ என்று எண்ணலாம்போல் தோன்றுகிறது அல்லவா?

இந்நிலையில், இடக் கரத்தில் மானை ஏந்தியுளர் இறைவர்.

தேவி பெயர் சங்கரி; சிவனார் பெயர் சங்கரர். எவ்வுயிர்களையும் இனிப்பாற்றுபவர்கள் என்பது, இப் பெயர்ப் பொருள். மேலும் இவ்விருவரும், யோக நோக்கினர். தேவி இமய யோகாட்சி; கயிலையில் இருந்தவர் கண்ணுதல் இறைவர். இந்த யோகாட்சி நேரத்தில், பௌதிக போகாட்சிக்கு இடம் இல்லை.

சந்தர்ப்பம் அறியாமல், தன் கை வரிசையைக் காட்டினன் காமன்.

நோக்கு இருவகை. ஒன்று தெய்வ நோக்கு; மற்றொன்று காம நோக்கு என்று அறிந்தோம். மான் நோக்கிற்கு இடம் செய்த மாதேவர், காம நோக்கில் வந்த மால் மகனை, பொன்றிப் போம்படி அவன் உடலைப் பொசுக்கினார். பஞ்சாயுத பாணியர் திருமால். இருந்தும் அவரால் எதுவும் செய்ய இயலவில்லை. வாளா இருந்தார்.

இந்த உணர்வின் ஒழுகலாறு, வரத சிவத்திற்கு எப்படி வந்தது தெரியுமா? செந்தாமரையை நாண வைத்த செந்தில் ஆண்டவன் திருவடிகள், உரிய இப்பேற்றைச் சிவனார்க்கு உதவின.

செந்தில் அத்தா! என் கதி என்ன? எனக்கு அப்பேறு என்று? என்றபடி. இப்பாசுரம், விமல முருகன் திருமுன் விண்ணப்பிப்பதுபோல் இருக்கிறது அல்லவா! 7

8 தந்தனஞ் சங்கை யணிகரர் சேர்க்கத் தடங்கணலை
தந்தனஞ் சங்கை யலரென்செய் யாடங்கச் சற்சனர்நித்
தந்தனஞ் சங்கை யகலறத் தீசெந்திற் சார்கதனித்
தந்தனஞ் சங்கை யநக னிளையனற் றடரற்கே

(பதப்பிரிவு)

தம்[1] தனம் [2]சங்கை அணிகரர் சேர்க்கத், தடங்கண் அலை
தந்தனம்; [3]சம் கை; [4]அலர்என்? செய்யாள் தங்கு, அச் சத்சனர், நித்
தம் தனம் [5]சங்கை அகல் அறத்து ஈ; செந்தில் சார்க; [6]தனித்
தந்தன் அஞ்சு அம்கை [7]அநகன் இளையன் நல் தாள் தரற்கே.

---

1. தனம் - குயங்கள். 2. சங்கை - சங்கு வளையல். 3. சம் கை - இன்பத்தை வெறுத்திடு. 4. அலர் - பழி. 5. சங்கை - ஐயம். தனித் தந்தன் - ஒற்றைக் கொம்பன். 7. அநகன் - பாவம் இல்லாத பரன்.

(ப. ரை.) சங்கை அணிகரர் தம் தனம் சேர்க்க - சங்கு வளையலை அணிந்த கைகளை யுடைய தையலர் குயங்களைத் தழுவ நினைத்து ;

தடம் கண் அலை தந்தனம் - அகன்ற (அவர்களது) பார்வையில் (அகப்பட்டுப்) பரதவித்தோம் ;

சம் கை - (மனமே! வீணான அந்த) இன்பத்தை வெறுத்து விடு !

அலர் என் - (இதனால் ஆகும்) பழி (நமக்கு) ஏன் ?

செய்யாள் தங்கு அச் சற்சனர் - (ஞானத்) திருவை வாழ்விக்கும் அந்த ஞானிகட்கு ;

நித்தம் தனம் சங்கை அகல் அறத்து ஈ - எந்நாளும் ஐயம் அகன்ற அறநெறியில், (உரிய) செல்வத்தை உதவு ;

தனித் தந்தன் - ஒப்பற்ற ஒரு (ஞான) தந்தத்தை யுடையவரும் ;

அஞ்சு அம் கை அநகன் இளையன் - அழகிய ஐங்கர அமலருமான கணபதியின் தம்பியான முருகன் ;

நல் தாள் தரற்கே செந்தில் சார்க - மங்களமான (தனது) மலரடிச் சேவை (நமக்கு) வழங்கற் பொருட்டு, (சிறந்த) திருச்செந்தூரை நீ சென்று சேர், (எ - று).

விரிவுரை

கல கல வளையல். குவிந்தமைந்த குயம். அதன் கூட்டுறவிற்கே ஆவலித்தாய். பேதை மனமே கேள் !

" கண்ணால் மயக்கி, முலையால் வெருட்டி, கடிதடத்துப்
புண்ணாம் குழியிடை தள்ளி, போதப் பொருள் பறிக்க "

மாயை விளைவித்த மையல் இது. அந்த அநியாயக் கண் வலையிற் பட்டு அலை மோதியது போதாதா ? காமி காமி யென்று, இதனால் வழிவழி பழி வரும். வீணான இச் சிறிய இன்பத்தை மறந்து விடு !

இப்படிப் பொய்ம்மையில் தொலையும் பொருளை, உத்தம அடியவர்கட்கு உதவு. என்றும் தொடரும் இப் புண்ணியம். இதனில் ஐயமே வேண்டா.

'திருந்திய நல்லறச் செம்பொன் கற்பகம்,
பொருந்திய பொருளொடு போகம் பூக்கும்.'

அப் பொருள் மெய்ப் பொருள். அப்போகம் சிவ போகம். அடியர் பணியால் இது ஆகும்.

அதன் பின் விக்கினம் தவிர்க்கும் விநாயகர் உளர். அவர்க்கு இளையவர் ஆறுமுகர். அப் பெருமான் திருவடியில் அடைக்கலம் ஆய்விடு!

எப்படி ஆகும் இப்பேறு என்கிறாயா? வேறு பேச்சே வேண்டா! போ! இப்போதே திருச்செந்தூர்க்குப் போய்விடு! உள்ளம் அறியும் உமை குமரன், உடனே உனக்கு சிறக்கத் திருவடித் தீட்சை செய்வன்.

இப்படி பொருள் தரும் இப் பாசுரத்தை, ஓதும் போதே உள்ளம் உருகுகின்றதே! ஓம்.

கோதயைர்க்குச் செல்வம் குயங்கள்; அதனால் அவைகளைத் தனம் என்பது வழக்காறு. ஸ்தனம் என்பது தனம் என்றாயது என்பாருமுளர். அறம் - (பாவத்தை) அறுப்பது எனும் பொருட்டு.

திருவடியே வீடு பேறு;

"தென்னன் பெருந்துறையான் காட்டாதன எல்லாம்
காட்டி, சிவம் காட்டி, தாள் தாமரை காட்டி, தன்
கருணைத் தேன் காட்டி"

எனும் திருவாசகமும்,

"சேவடி பரவும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம் பிரிந்து உறையும்"

எனும் திருமுருகாற்றுப் படையும்,

"மென்மலர்த்தாள் அன்றே
தரும் பரவத் தானே தனை"

எனக் குமர குருபரரும், ஊன்றிக் குறிப்பாக இதை உணர்த்தியது உணர்க. (8)

9 தரங்கனந் தார னனியேற் றெழிற்செந்திற் றந்தைநிரந்
தரங்கனந் தாரக நாடினென் றேநினை சத்தியரந்
தரங்கனந் தார நகரீசர் சேய்கிரித் தையலர்க்கந்
தரங்கனந் தாரள கஞ்சிற் றிடைசல சங்கண்களே.

(பதப்பிரிவு)

[1]தரங்கம் [2]நந்து [3]ஆரல் நனி ஏற்று எழில் செந்தில் தந்தை; [4]நிரந் தரம் [5]கனம் [6]தாரகம் நாடின் என்றே நினை [7]சத்தியர், [8]அந் தரங்கம் [9]நந்தார்; [10]அநகர் ஈசர் சேய்கிரித் தையலர்க்கு, [11]அந் தரம்[12]கனம் தார் அளகம் சிற்றிடை, [13]சலசம் கண்களே.

(ப - ரை.) தரங்கம் நந்து ஆரல் நனி ஏற்று எழில் செந்தில் தந்தை - (கடல்) அலைகள், சங்குகளை மதில்களில் ஏறும்படி வீசு இன்ற அழகிய (வளமுள) திருச்செந்தூரில் வீற்றிருக்கும் தனிப் பெரும் (தெய்வத்) தந்தையும் ;

நிரந்தரம் தாரகம் நாடின் கனம் என்றே நினை சத்தியர், அந்தரங்கம் நந்தார் - எக்காலத்தும் (சிறந்த) பிரணவப் பொருளைச் சிந்தித்தல் மேன்மையாம் என்றே எண்ணிக் கொண்டிருக்கும் சிவ ஞானிகளின் இதய சிற்றமபலத்தை நீங்காது இருப்பவரும் ;

அநகர் ஈசர் சேய் கிரித் தையலர்க்கு - சிறு களங்கங்கூட இல்லாதவருமான சிவனுர் மைந்தருடைய மலையில் வாழும் மாதிற்கு;

தார் அளகம் கனம் - மாலை சூடிய கூந்தல் மேகம் போலுளது;

சிற்றிடை அந்தரம் - (அழகிய) சிறிய இடை ஆகாயம் போல் உளது ;

கண்கள் சலசம் - கண்கள் கமலம் போன்றன, (எ - று).

விரிவுரை

இடை அந்தரம், அளகம் கனம், கண்கள் சலசம் என்று கூட்டிப் பொருள் கொள்ளப் பெற்றது.

வளம் நிறைந்தது திருச்செந்தூர். விளக்கமாக அப்பதியில் வீற்றிருப்பவர், எவ்வுயிர்க்கும் தந்தையாய் இருப்பவர்.

அவர், ஓம்பொருள் உணரும் உத்தமர் உள்ளம் பிரியாமல், அவர்கட்கு அதி நுட்ப அனுபவம் காட்டுபவர்.

எக்குற்றமும் சொல்ல முடியாதவர் அந்த எம்பெருமான்.

அவர்க்குரிய குறிஞ்சியில் ஒரு குமரி. அவள் பெயர் அருள். அவள், இலதோ உளதோ எனும்படி அத்துணைச் சிற்றிடையாள்.

---

1. தரங்கம் - அலைகள். 2. நந்து - சங்குகள். 3. ஆரல் - மதில்கள். 4. நிரந்தரம் - என்றும். 5. கனம் - பெருமை. 6. தாரகம் - பிரணவம். 7. சத்தியர் - மெய்ஞ்ஞானிகள். 8. அந்தரங்கம் - இதய இரகசியத்தில். 9. நந்தார் - நீங்காதிருப்பார். 10. அநகர் - பாவம் இல்லாதவர். 11. அந்தரம் - ஆகாயம். 12. கனம் - மேகம். 13. சலசம் - தாமரை.

கருமுகில் போலும் கூந்தலாள். கமலம் போன்ற கண்ணினள். காணத்தக்க அவளைக் கண்டேன். மேலான அவளைக் கண்டபின், மெய்ம்மறந்தேன் என்று, தோழனிடம் தலைவன், தலைவியின் அவயவம் புகழ்ந்து இயலிடம் கூறும் துறை இது.

அருளை ஆன்மா அவாவுகின்றது; அறிவெனும் பாங்கனிடம், அந்த அருளின் அருமையை, வேட்கைப் பெருக்கம் வெளிப்பட விளம்புகின்ற செய்தி இது. சொல்ல இயலாத அனுபவங்களை, இப்படி ரூபகாலங்காரம் தோன்றச் சொல்வது ஞானிகள் நடை. (9)

10 சங்கங் களங்கழ னிக்கரை சேர்செந் திற் றங்கினநஞ்
சங்கங் களங்கர நண்ணரன் சேயெய்தச் சார்ந்தனஞ்சற்
சங்கங் களங்க னியைநிகர் தண்ட தரற்கினிய
சங்கங் களங்க ரெனநின்ற யாங்கணெஞ் சங்கரைந்தே.

(பதப்பிரிவு)

சங்கங்கள் அம் கழனிக்கரை சேர் செந்தில் தங்கினம்; நஞ்
சம்[1]கம் [2]களம் [3]கரம் நண் அரன்சேய் எய்தச், சார்ந்தனம் சற்
சங்கம்; [4]களங்கனியை நிகர் [5]தண்டதரற்கு, இனி[6] அ
சங்கம்; [7]களங்கர் என நின்ற யாங்கள் நெஞ்சம் கரைந்தே.

(ப . ரை.) சங்கங்கள் அம் கழனிக் கரை சேர் செந்தில் தங் இனம் - சங்குகள் அழகிய வயல்களின் கரைகளில் நடமாடுகிற (இன்பத்) திருச்செந்தூரில், தங்கி இருந்தோம் ;

களங்கர் என நின்ற யாங்கள் நெஞ்சம் கரைந்தே - (கொடிய மும்மல சம்பந்தத்தால்) குற்றவாளிகள் என இருந்த நாங்கள் உள்ளம் (நெகிழ்ந்து) உருகி,

நஞ்சம் களம் கம் கரம் நண் அரன் சேய் எய்த - விடம் கண்டத்திலும், (பிரம) கபாலம் கரத்திலும் தங்கிய சிவ குமாரனைச் சேர்தற் பொருட்டு,

சற் சங்கம் சார்ந்தனம் - அடியவர் கூட்டத்தில் அடைக்கலம் ஆயினோம் ;

களங்கனியை நிகர் தண்டதரற்கு இனி அசங்கம் - களாப் பழம்போலும் நிறமுடையவனாய், தண்டு எனும் படை ஏந்திய இயமனுக்கு இனி அசைந்து கொடுக்க மாட்டோம், (எ - று).

---

1. கம் - தலை. 2. களம் - கழுத்து, 3. கரம் - கை. 4. களங் கனி - களாப்பழம். 5. தண்டதரற்கு - இயமனுக்கு. 6. அசங்கம் - சலிக்க மாட்டோம், 7. களங்கர் அழுக்கினர்,

விரிவுரை

செந்தில் தங்கினம். நெஞ்சம் கரைந்து, நஞ்சம் களம், கம் கரம் நண் அரன் சேய் எய்த சற்சங்கம் சார்ந்தனம். தண்டதரற்கு இனி அசங்கம் எனக் கூட்டுக.

அரன் - அரிப்பவன் ; அரித்தல் - அழித்தல் ; நீறு புனேவார் வினையை நீருக்கி, மயக்கத்தை விலக்கி, ஆணவ இருளை அகற்று வதால் பெற்ற பெயர் இது.

உலகை உய்விக்க விடம் உண்டு, பிறப்பளிப்பான் தலையைக் கையில் பிடித்து, மும்மல கண்டனம் செய்யும் முதல்வன் குமாரன் தன் முதன்மை தோன்ற இருக்கும் இடம் திருச்செந்தூர். அதனால், கழனிக் கரையில் சங்குகள் உலவும் அளவு, வளம் வாய்த்தது அத் தெய்வத் திருப்பதி.

இவைகளை எண்ணினோம். உள்ளம் கவர்ந்தது அத்தலம். தனிப்பெரும் அத்தலத்தில் சென்று தங்கினோம்.

கோணைகளான எவரோடும், வீண் உறவு கொண்டிலம். செவ்வேள் பெருமானை, அங்கு நாள் தோறும் சேவித்தோம்.

அநாதி காலம் தொட்டு அழுக்குடைய யாங்கள், செந்திலா னைச் சேவிக்கும் போதெல்லாம், உள்ளமோ பாகாய் உருகியது. பிர போ ! நினது திருவடி நிழலில், அடியேம் நிற்கும் நாள் என்றேயோ? என்று கதறினோம்.

யாது அதற்குவழி? இப்படியே சிறக்கப் பலநேரம் சிந்தித்தோம்.

அசத்தை மறந்தனர். சத்தையே நினைந்தனர். உணர்ந்தனர். நெகிழ்ந்தனர் அருமைச் சிவஞான அடியவர்கள். அவர்களைச் சார்ந் தால், சார்ந்த வண்ணம் ஆவது ஆன்மா என்பதை அறிந்தோம்; கனிந்த அவர்களில் கலந்தோம். இந் நிலையில், செந்தில் பெருமான் திருவடிப் பேறு சித்திக்கும் என்று நம்பியுளம்.

இனி, கறுத்த நிறத்தொடு வந்து, தொல்லை தரும் காலன் எம்மைத் தொட முடியுமா?

> " அந்தகா ! நீ ஒரு பகட்டாய்ப் பகட்டுவது
> அடாதடா ! காசு நம்பால் செல்லாதடா. ! "

> " தண்டாயுதமும் திரிசூலமும் விழத் தாக்கி, உன்னைத்
> திண்டாட வெட்டி விழவிடுவேன்; செந்தில் வேலனுக்குத்
> தொண்டாகிய என் அவிரோத ஞானச் சுடர்விடுவாள்
> கண்டாயடா ! அந்தகா ! வந்துபார், சற்றுஎன் கைக்கு
> எட்டவே "

என்று இறுமாந்து கூறி யிருப்பம் என்பது கருத்து. (10)

11 கரத்தரிக் கங்கணங் கட்டர ஞர்தந்த கந்தரழ
கரத்தரிக் கங்கணங் கண்டசெய்ச் செந்திலெங் காங்கெயர்சா
கரத்தரிக் கங்கணங் கட்கய ஞர்க்கெழிற் காசணிசே
கரத்தரிக் கங்கணங் கற்றிடத் தாங்கினர் கைச்சத்தியே.

(பதப்பிரிவு)

கரத்து [1]அரிக் கங்கணம் கட்டு அரனூர் தந்த கந்தர்; அழகர்; அத்தர்; [2]இக்கு [3]அங்கணம் கண்ட [4]செய்ச்செந்தில்எம் [5]காங்கெயர்; [6]சாகரத்து [7]அரிக்கு, அம் கணங்கட்கு, அயனூர்க்கு, எழில் [8]காசு அணி[9]சேகரத்து [10]அரிக்கு, அங்கு [11]அணங்கு அற்றிடத் தாங்கினர் [12]கைச்சத்தியே !

(ப. ரை.) கரத்து அரி கங்கணம் கட்டு அரனூர் தந்த கந்தர் - கரத்தில் (கடும்) பாம்புக் கங்கணம் கட்டிய கண்ணுதல் அருளிய கந்தசுவாமி (எனும் நலம் சிறந்த) நாமத்தரும்; அழகர் - (எவர்க்கும் இல்லாத) பேரழகரும்; அத்தர் - பரம பிதாவும்;

இக்கு அங்கணம் கண்ட செய் செந்தில் எம் காங்கெயர் - (முற்றிய) கரும்புகள் சேற்றில் முளைக்கும் வயல்வளம் உடைய திருச்செந்திலில் எழுந்தருளியவருமான எமது காங்கேயர்;

சாகரத்து அரிக்கு - திருப்பாற் கடலில் அறிதுயில் அமரும் திருமாலுக்கும்;

அம் கணங்கட்கு-அழகிய (வானவர் முதலிய) கூட்டத்திற்கும்;

அயனூர்க்கு - பிரம தேவர்க்கும்;

எழில் காசு அணி சேகரத்து அரிக்கு - எழிலுள (முதன்மை) நவமணி பதித்த முடிசூடிய இந்திரனுக்கும;

அங்கு அணங்கு அற்றிட - அவ்விடத்தில் (சூரன் முதலியோரால் உண்டான) துன்பம் தொலைதற் பொருட்டு;

கைச் சத்தி தாங்கினர் - திருக்கரத்தில் தெய்வ வேல் தாங்கியுளர், (எ - று).

---

1. அரி - பாம்பு. 2. இக்கு - கரும்பு. 3. அங்கணம் - சேறு. 4. செய் - வயல். 5. காங்கெயர் - கங்கை தனயர். 6. சாகரம் - கடல். 7. அரி - திருமால். 8. காசு - நவரத்தினம். 9. சேகரம் - மகுடம். 10. அரிக்கு - இந்திரனுக்கு. 11. அணங்கு - துன்பம். 12. கைச்சத்தி - கைவேல்.

விரிவுரை

பரிக்கிர சக்திகள் பாம்புரு ஆயினர். அவர்கள், உலக அதி தேவதைகள். அவர்களைச் சிவபிரான் தம் அணிகலன் ஆக்கினர். தலையாய தேவதை, கண்ணுதல் பரமன் கரத்தில் கங்கணம் ஆயது. அக் கங்கணம், காக்கக் கடவியவன் என்பதைக் காட்டுகின்றது.

மலம் கெடுக்கும் அம் மாதேவர் தந்த கந்தர், அருமை அழகர்; அனைவர்க்கும் அத்தர்.

அவர், சேறு நிறைந்த வயல்களில், கரும்புகள் செழித்து வளரும் செந்தில் பதியார்.

கழுமிய பாவத்தைக் கழுவும் அப்ராக்ருத கங்கையின் அருமைத் தனயர் எனும், அவரது மாபெரும் விலாசம் மறக்க முடியுமோ?

பாற்கடலில் நிம்மதியாய்ப் பள்ளி கொள்வர் திருமால். எண்ணிய இடம் எங்கும் செல்லும் புண்ணியர் விண்ணவர்; திருமாலின் உந்தியில் தோன்றி, கலா தேவியுடன், படைக்கும் தொழிலினர் பிரம தேவர். அரிய புண்ணிய உலக அதிபதியாய், இன்பம் கொண்டு இருப்பவன் இந்திரன்.

இடையிடை அவுணர் எழுவர்; மேலுரைத்த உத்தமர் யாவரையும் உபத்ரவிப்பர். அதிக கவலை யடையும் அவர்கள், கந்த சுவாமீ! சௌந்தர்ய சிகரமே! அத்தா! செந்தில் செல்வமே! காங்கேயர் என்று கூவி யழைத்துக் குமுறுவர்.

இந்த நிலை என்றும் நேராதபடி, ஞானசக்தி யெனும் பரம வேல் படையை, எம்மான் கரத்தில் ஏந்தியுளன்.

சத்திய சொருபமான அச் சத்தி, பேராற்றல் கொண்ட அப் பெருவேல், தற்பர ஞானமான அத்தனி வேல், எம்மான் இடத்தில் என்றும் இருத்தலின், இனி எவர்க்கும் இடையூறு இல்லை என்றபடி. *(11)*

12 சத்திக் கரத்த னகச்சேயங் கத்தினைத் தந்தனனற்
சத்திக் கரத்த னகச்சிலை யாளிதன் ருளினைநே
சத்திக் கரத்த னகத்தியைந் தேத்தரன் தந்தகதிர்ச்
சத்திக் கரத்த னகசெந்தி லாய்நின் சரண்சரணே.

(பதப்பிரிவு)

சத்திக் [1]கரத் தன் [2]அகச் சேய்[3] அங்கத்தினைத் தந்தனன்; நல்
[4]சத்திக்கு [5]அரத்தன்; [6]நகச்சிலை ஆளி; தன் தாள் இணைநே
சத்து[7] இக்கர் [8]அத்தன் அகத்து இயைந்து ஏத்து அரன் தந்த, கதிர்
[9]சத்திக் கரத்து அனக! செந்திலாய்! நின் சரண் சரணே!

(ப. ரை.) சத்திக் கரத் தன்அகச் சேய் அங்கத்தினைத் தந்தனன் - வலிமையுடைய முதலை தன் வயிற்றுள் விழுங்கி வைத்த (அந்தணச்) சிறுவன் உடலை, (ஆளுடைய நம்பிகளின் திருப்பதிகத்தின் பொருட்டு) எழுப்பித் தந்தவரும்;

நல் சத்திக்கு அரத்தன் - மங்களமான பரா சத்திக்குப் பாதித் திருமேனியைப் பகிர்ந்தவரும்;

நகச் சிலை ஆளி - (மேரு) மலையை வில்லாக ஆண்டவரும்;

தன் தாள் இணை நேசத்து - தனது இரு திருவடிகளில் அன்பு கொண்ட;

இக்கர் அத்தன் அகத்து இயைந்து ஏத்து அரன் தந்த - கரும்பு வில்லுடைய காமன் தந்தையான திருமாலின திருவுளத்தில் தங்கி, (தூய அவரால்) துதிக்கப் பெற்ற சிவனார் அருளிய;

கதிர் சத்திக் கரத்து அனக - ஒளியுடைய வேல் ஏந்திய திருக்கரத் தெய்வமே!

செந்திலாய் - திருச்செந்தூரில் எழுந்தருளிய தேவே!

நின் சரண் சரணே - (அரிய) உமது திருவடிகட்கே அடைக்கலம், (எ - று).

விரிவுரை

இரு அந்தணச் சிறுவர்கள், விறு விறுத்துப் பொய்கையில் விளையாடினர். இருவருள் ஒருவனை, வேகம்பட வந்த முதலை விழுங்கியது. உய்ந்த சிறுவனால் விவரம் உணர்ந்து, இறந்தவன் பெற்றோர் ஏங்கி அழுதனர். நாள்கள் பல நடந்தன; திங்களும் பல தேய்ந்தன; உருண்டு சில ஆண்டுகள் ஓடின. முதலை இறந்தது; வாய்த்த பொய்கையும் வற்றி, வெறுந்தரை யாயது அங்நிலம்.

ஒரு நாள், உய்ந்த மகனுக்கு உபநயனம் நடக்கிறது.

---

1. கர - முதலை. 2. அகம் - வயிற்றுள். 3. சேய் - (அந்தணச்) சிறுவன். 4. சத்திக்கு - உமைக்கு. 5. அரத்தன் - அர்த்தன்; பாதியன்; அகரம் விரித்தல் விகாரம். 6. நகச்சிலை - மலைவில். 7. இக்கர் - கரும்பு வில் காமன். 8. அத்தன் - பிதா. 9. சத்தி - வேல்.

நமது மைந்தன் இருந்தானேல், அவனுக்கும் உபநயனம் நடத்துவமே! இது எங்கள வயிறு செய்த பாவமா? பாவமா? என்று வாயறைந்து வயிறறைந்து, குலுங்கி யழுது பெற்றோர் குமுறினர்.

அவிநாசி எனும் தலத்தில், இவர்கள் எதிரெதிர் வீட்டில் இருந்தவர்கள்.

ஆளுடைய நம்பிகள், அத்தலத்திற்கு வந்தார். அந்தணர் வீதியில், ஒரு வீட்டில் மங்கல ஒலி; எதிர் வீட்டில் அழுகுரல் ஓசை.

அறிந்த நம்பிகள் திருவுளம் அதிர்ந்தது. அழுவாரை அழைத்தார். வினவினார். விவரம் அறிந்தார். நுண்மை அவர் திருவுளம் நொந்தது.

வறண்ட நிலமான பொய்கையின் கரைக்கு வந்தார்.

" அருள் ஓங்கு சடையானே! பொழிலாரும் சோலைப்
புக்கொளியூரிற் குளத்திடை, இழியாக் குளித்த
மாணி, எனைக் கிறி செய்ததே!"

" உரைப்பார் உரை உகந்து, உள்கவல்லார் தங்கள் உச்சியாய்!
அரைக்காடு அரவா! ஆதியும் அந்தமும் ஆயினாய்!
புரைக்காடு சோலைப் புக்கொளியூர் அவிநாசியே!
கரைக்கான் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே"

என்று, பரம ஒரு திருபபதிகம் பாடினார். அவ்வளவில், வறண்ட பொய்கையில் நீர் சுரந்தது. இயமனுக்கும் கட்டளை பிறந்தது. முதலைக்கும் உருவம் கிடைத்தது. அதன் வயிற்றில், அந்தணச் சிறுவன் உருவாயினன்.

கரையில் வந்த முதலை, பிள்ளையைக் கக்கியது. பதிகம் கேட்ட பரமன், சிறந்த இத் திருவிளையாடலைச் செய்தனன்; ஆளுடை நம்பிகள் பார்வையில், அந்தச் சிறுவனுக்கும், நலக்க அன்றே உபநயனம் நடந்தது.

இவ்வரலாற்றுத் தத்துவத்தை,

" வாங்குசிலை புரையும் உடலெனும் குளத்தில், மூல
மலமெனும் ஓர் வெங்கரவின் பகுவாயில் நின்றும்,
நீங்கில் உயிர் எனும் பனவக் குலமகனை, ஆதி
திரோதாயி என்னும் ஒரு வெந்திறல் கூற்றுவனால்,
ஓங்குறு நாதாந்தம் எனப் பெயரிய அக் கரையில்
உமிழ்வித்துச், சிவமெனும் ஓர் தந்தையொடும் கூட்டாய்;
கோங்கமுகை கவற்றும் இள முலைப்பரவை மகிழக்,
குண்டையூர் நெல்மலை முன் கொண்ட அருட்கடலே!"

எனும் நால்வர் நான்மணி மாலையும் நயம்பெற விளக்குகின்றது.

பிரார்த்தனைக்கு இரங்கி, இறந்த பிள்ளையை எழுப்பிய பெருமான், தன் உருவப் பாதியில் உமையை வைத்து, கம்பீரமான தெய்வீகம் காட்டுகின்றான்.

மலையை வில்லாக வளைத்தது, அவன் நெடும்பேராற்றலை நினைவூட்டுகின்றது.

காத்தல் தொழில் திருமால், என்றும் கருதும், அரன் எனும் நாமம் தனக்கே உடையவன் அந்தத் தற்பரன்.

அத்துணைச் சிறந்த சிவனார் அருளிய செல்வமே! ஆணவ இருளை அகற்றி, உத்தம உயிர்களை ஒளிமயமாக்கும் ஞான சக்தியாம் வேல் கரத்து விமலா! திருச்செந்திலில் எழுந்தருளிய தெய்வமே! நின திருவடிகட்கே அடைக்கலம் என்றபடி.

உள்ளத்தில் இப்பாசுரம் ஊறி ஊறி, ஊனெலாம், தோலெலாம், ஊறும் உதிரமெலாம், என்பெலாம், என்பினுள் துளையெலாம் புகுந்து பரவிப் புனிதமானவரே அன்பாளர், அறிவாளர், அருளாளர் என்று அறியலாம் அல்லவா. ஓம். *(12)*

13 சரிதங்கை யாரக் கலன்றந் தனந்தரித் தார்நரகே
சரிதங்கை யாரக் கரிடத்தி னார்தந்த தண்செந்திலவே
சரிதங்கை யாரக் கணத்தின்னல் கைத்தல் சரதந்தஞ்சீர்ச்
சரிதங்கை யாரக் கசிந்திசைக் கின்ற தகையினர்க்கே.

(பதப்பிரிவு)

[1]சரி தம் கை, [2]ஆரக் கலன் தம் [3]தனம் தரித்தார், [4]நரகே
சரி தங்கையார், அக்கர் இடத்தினார் தந்த, தண் செந்தில வே
சர்; [6]இதம் [7]கையார்; அக்கணத்து இன்னல் கைத்தல் [8]சரதம்;
[9]தம்சீர்ச்
சரிதம் [10]கையாரக் கசிந்து இசைக்கின்ற [11]தகையினர்க்கே.

(ப - ரை.) *சரி தம் கை* - (அழகிய) வளையல்களைத் தமது கரத்தில் அணிந்தவரும்;

ஆரக்கலன் தம் தனம் தரித்தார் - (தனிப்பெரும்) முத்து மாலையைத் தமது குயங்களில் தரித்தவரும்;

---

1. சரி - வளையல். 2. ஆரக்கலன் - முத்துமாலை யணி. 3. தனம் - குயம். 4. நர கேசரி - நரசிங்கத்தின். 5. அக்கர் - சங்குமணி தரித்த சங்கரர். 6. இதம் - இன்பம். 7. கையார் - வெறுத்த விலக்கார். 8. சரதம் - நிச்சயம். 9. தம் சீர்ச் சரிதம் - கந்தபுராணம். 10. கையார - அக ஒழுக்கம் அமைய; கை - ஒழுக்கம்; உபசர்க்கம். 11. தகையினர் - தகுதியுடைய மேலோர்.

நர கேசரி தங்கையார் - நரசிங்கமான திருமாலின் தங்கையும் ;

அக்கர் இடத்தினர் தந்த - சங்கு மணியைத் தரித்த சிவனாரது இடப்பாகத்தில் இருப்பவருமான அம்பிகை அருளிய ;

தண் செந்தில் நேசர் - தண்மைத் திருச்செந்தூரில் தனியன்பு கொண்ட முருக தற்பரர் ;

இதம் கையார் - (அருமை) இன்பத்தை மாறாது அளிப்பவர் ;

தம் சீர்ச் சரிதம் கை ஆரக் கசிந்து இசைக்கின்ற தகையினர்க்கு - தமது சிறப்புரைக்கும் கந்தபுராணத்தை, ஒழுக்கம் பொருந்த உள்ளம் உருகி ஓதுகின்ற தகுதியுடைய உத்தமர்க்கு ;

அக்கணத்து இன்னல் கைத்தல் சரதம் - (ஓதும்) அந்தக் கணத்தில், அவர்கட்கு விளையும் துன்பத்தை வெறுத்து விலக்குதல் சத்தியமான செய்தி, (எ - று).

விரிவுரை

அன்பர்கட்கு இன்பம் தருவார் ; கந்தபுராண படனம் செய்வார்க்குத் துன்பம் தவிர்ப்பார் என்பது கருத்து.

தேவி என்றும் மங்கலை ; அதற்கு அடையாளமாக, கைமேல் வளையலும் குயமேல் முத்தாரமும் கொண்டார் ; அத்தேவி சிறந்த ஆற்றலை யுடையவர் என்பதை, நரசிங்கத்தின் தங்கை என்பதாலும் நாம் அறிவோம். சிவனார் இடப்பால் இருக்கின்றாள் அச்சிவை.

அந்த அன்னை தந்த மைந்தர், செந்திலை விரும்பிய செவ்வேள் இறைவர். இன்ப மேனியரான அவர், அன்பர்க்கு என்றும் அருள் கின்றார்.

கருணையே உருவான அவரது அருள் வரலாறு, கந்தபுராணம் எனப்பெறும்.

சிவஞான போதம் இலக்கணம் ; கந்தபுராணம் இலக்கியம் ; முன்னையது சாத்திரம் ; பின்னையது சரித்திரம். சாத்திரத்தில் சரித்திரமும், சரித்திரத்தில் சாத்திரமும் விரவி யிருப்பதை அறியார் யார் ?

சொருப லட்சணம், தடத்த லட்சணம், மும்மல கண்டனம், தவப்பேறு, குரங்குப்பிடி, பூனைப்பிடிக் கோட்பாடு, துதிநிலை, யோக நிலை, ஞானநிலை முதலியன நிறைந்த அப்புராணத்தை, அகமும் புறமும் ஒழுக்கம் அமைய, ஓதுவார் துன்பத்தை ஒழிக்கின்றார் செந்தி லாண்டவர்.

ஆ ! மறக்க முடியாத பாடல்களில் இது ஒன்று. (13)

14 இனனந்தி யங்கி நிகர்த்தசெங் கேழன்கை யீரிரண்டா
யினனந்தி யங்கிரி யைச்சிலை யாக்கிதன் சேயெழிற்செய்
யினனந்தி யங்கி யிருங்கஞ்சஞ் சேர்செந்தி லெந்தைதனை
யினனந்தி யங்கிசை யக்கதி யீந்தன னென்றனக்கே.

(பதப்பிரிவு)

[1] இனன் [2] அந்தி [3] அங்கி நிகர்த்த [4] செங்கேழன்; கை ஈர் இரண்டு ஆயினன்; நந்தி; அம் [5] கிரியைச் சிலையாக்கிதன் சேய்; எழில்செய்[6] [7] இனம் [8] நந்து இயங்கி, [9] இரும் கஞ்சமசேர் செந்தில் எந்தை, [10] தனை [11] இனல் நந்தி அங்கு இசைய, கதி ஈந்தனன் என்றனக்கே.

(ப - ரை.) இனன் அந்தி அங்கி நிகர்த்த செம் கேழன் - ஞாயிற்றையும், செவ்வானத்தையும், நெருப்பையும் போன்ற சிவந்த நிறத்தை யுடையவரும்;

கை ஈர் இரண்டு ஆயினன் - நான்கு திருக்கரம் கொண்ட நம்பரும்;

நந்தி - நந்தி எனும் நாம நலத்தரும்;

அம் கிரியை சிலையாக்கிதன் சேய் - அழகிய (மேரு) மலையை வில்லாக வளைத்தவருமான சிவனார் தந்த செல்வராகியும்;

எழில் செய் இனம் நந்து இயங்கி இரும் கஞ்சம் சேர் செந்தில் எந்தை - அழகிய வயல்களில் கூட்டமாகச் சங்குகள் ஊர்ந்து, சிறந்த தாமரையில் ஏறித் தங்கும் திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள, எமது பரம தந்தையுமான கந்தப் பரமன்;

தனை இனல் நந்தி அங்கு இசைய - பாசத் துன்பத்தால் பரதவித்து, (போதும் வேதனை யென்று) அவன் சந்நிதியில் போய்ச் சேர;

என் தனக்கே கதி யீந்தனன் - எனக்கு முத்திப் பேற்றை வழங்கினன் (எ - று).

விரிவுரை

செந்நிறத்தர்; அபய வரத, மான், மழு அமைந்த நால் தோளர்; மலை வில்லாளியின் மைந்தரான கந்தர், எழில் மிகு வளமுள செந்தில் எந்தை பெருமான், மறக்க முடியாத மாபெருங் கருணையன்.

---

1. இனன் - சூரியன். 2. அந்தி - செவ்வானம். 3. அங்கி - தீ. 4. செங்கேழன் - செந்நிறத்தன்; கேழ் - ஒளி. 5. கிரியை - மலையை. 6. செய் - வயல். 7. இனம் - கூட்டம். 8. நந்து - சங்குகள். 9. இரும் கஞ்சம் - சிறந்த கமலம். 10. தனை - பாசபந்தம். இனல் - இன்னல்; துன்பம். 12. நந்தி - கெட்டலைந்து.

பல பிறப்பெடுத்தேன்; ஒவ்வொரு பிறப்பிலும் பாசத்தால் பல்லிளித்தேன். அதன் பயனாக, ஆயிரம் ஆயிரம் துன்பங்களை அனுபவித்தேன்.

இவைகளை அறிந்தான். இரக்கம் காட்டினன் செந்தில் எம்மான். வா எம் தலத்திற்கு என்று வழி காட்டினன். வந்தேன். துன்பம் யாவும் தொலைந்தது.

" இருந்திட்டுப் பெறவே மதியாயினும்
இறந்திட்டுப் பெறவே கதியாயினும்
இரண்டில் தக்கதொர் ஊதியம் நீ தர இசைவாயே !"

எனும் பிரார்த்தனை கண்டு, வாழ்வளிக்கும் கதியை வழங்கினன் என்று மகிழ்ந்தபடி. (14)

15 தனக்கடங் காரெயில் செற்றகங் காளன் றனயனங்கந்
தனக்கடங் காதிழி தந்திக் கிளையன் றளிரெழிற்சந்
தனக்கடங் காநிறை செந்திலி னற்சேய் சயிலநங்கை
தனக்கடங் காணினச் சாரிலை யண்ண றரணியிலே.

(பதப்பிரிவு)

தனக்கு அடங்கார் [1]எயில் செற்ற [2]கங்காளன் தனயன்; அம் கந்தன்; [3]அக்கடம் காது இழி தந்திக்கு இளையன்; தளிர் எழில்சந்தனக் [4]கடம்[5]கா நிறை செந்திலில் நல்சேய்; [6]சயில நங்கை [7]தனக்கடம் காணின், [8]நச்சார் இலை [9]அண்ணல் தரணியிலே.

(ப - ரை.) தனக்கு அடங்கார் எயில் செற்ற - தனக்கு அடங்காத அவுணர்களுடைய (முப்புர) மதில்கள் மூன்றையும் அழித்த;

கங்காளன் தனயன் - முழு என்பு மாலை யணிந்த முதல்வன் குமாரனும்;

அம் கந்தன் - அழகின் முழுமையான (அருமைக்) கந்தப் பெருமானும்;

அக் கடம் காது இழி தந்திக்கு இளையன் - (அநாதி காலம் தொட்டுப் பெருகும்) அந்த அருள் மதம், (விமல) திருச்செவிகளினின்று வழிகின்ற ஒற்றைக் கொம்பரான பிள்ளையார்க்குத் தம்பியும்;

1. எயில் - (முப்புரத்துள்ள பொன் வெள்ளி இரும்பாலான) மும்மதில்கள். 2. கங்காளன் - எலும்பணியும் சிவபிரான். 3. அக்கடம் - அம்மத நீர். 4. கடம் - காடு. 5. கா - சோலைகள். 6. சயில நங்கை - மலையரசன் மகள். 7. தனக் கடம் - (பருத்த) குயங்களாகிய குடங்கள். 8. நச்சார் - விரும்பாதவர். 9. அண்ணல் - அண்ணலே; தலைவா; விளியுருபு இயல்பாயிற்று.

தளிர் எழில் சந்தனக் கடம் கா நிறை செந்திலில் நற்சேய் - தளிர்கள் தங்கிய அழகிய சந்தனமரக் காடுகளும், மலர்ச் சோலை களுமம் நிறைந்த (வித்தகத்) திருச்செந்தூரில் வீற்றிருப்பவனுமான மங்கள முருகனுடைய ;

சயில நங்கை தன கடம் காணின் - மலைமேல் உள்ள மங்கை யின் குயங்களாகிய குடங்களைக் காண நேர்ந்தால் ;

அண்ணல் - (பெருமையிற் சிறந்த) தலைவர் பெருமா !

தரணியில் நச்சார் இலை - விரிந்த இவ்வுலகில் (அத்தலைவியை) விரும்பாதவர் இரார், (எ - று).

விரிவுரை

அண்ணல்! கங்காளன் தனயன், கந்தன், தந்திக்கு இளையன், நல்சேய் சயில நங்கை தனம் காணில், தரணியில (அவனை) நச்சார் இலை எனக் கூட்டுக.

கமலாட்சன், தாரகாட்சன், வித்யுன் மாலி எனும் முப்புர அவுணர் தலைவர் மூவர். இவர்கள், பரம சிவபக்தர்கள். முப்புர வாசிகள், தம் தலைவர் மூவர்க்கும் அடங்கிலர். சிவ நிந்தனையை நாளதோறும் செய்தனர். அமலன் அடியவர்க்கு, கொடிய தொல்லை பல கொடுத்தனர்.

அன்பர்கள் உலகம் அலறியது. அதனை யறிந்து, அம் முப்புரத் தையும் சிரித்து எரித்தது சிவம். பேற்றிற்கு உரிய தலைவர் மூவரும், பிழைத்தனர். இன்றும் கயிலையில் அவர்கள் இருக்கின்றார். இதனால், சிவனார் எயில் செற்றார் எனப்பெற்றார். இவ்வரலாற்றில், 'முப்புரமாவது மும்மல காரியம்' எனும் தத்துவக் குறிப்பும் தனியுளது.

கா ! எம்மைக் கா ! எனக் காப்பாளர் வேண்ட, மாபெரும் அவர் என்பை மாலையாகத் தரித்து, அவரைப் பிறவாமை செய்தான் பிரான்.

'கங்காளம் ஆமாகேள் ! காலாந்தரத்து இருவர்
தங்காலம் செய்யத் தரித்தனன் காண் சாழலோ'

எனத் திருவாசகமும் இதைத் தெரிவிக்கின்றது. இதனால் கண்ணு தல் பெருமான், கங்காளர் எனும் பெயர் எய்தினர்.

மும்மலகண்டனரும் கங்காளருமான சிவனார் தனயர், நாலாயிரம் கண் கொண்டு கண்டாலும், முழுக்கக் காண முடியாத பேரழகின் பிழம்பானார். மேலும் அவர், 'கருணை மதம் பொழி சித்தி வேழத் தின்' தம்பி என்றபோது, அவர் பெருமையை அளக்க வல்லார் யார்?

சந்தனச் சோலை யாதிய மணம் கமழும் அவர் திருச்செந்தூர், அவரது அருள் மணத்தை, அனுபவமாம்படி அறிவிக்கின்றது.

அவரது அருள், குறிஞ்சிக் குமரியாம் கோலம் கொண்டது; அகில உலகிற்கும் பாலருத்தும் அவள் குடம்போன்ற குயம் கண்டு, ஆன்மாவாகிய தலைவா! இன்ப மேனியளான அத்தலைவியை, இச்சியாதவர் இல்லை; எனவே, கட்டழகியரான அவளை, நீ காதலித்ததில் பிழையில்லை யென்று, அறிவென்னும் தலைவன் ஆறுதல் கூறிய பாடல் இது.

அருளை அரிவை என்றது, ரூபகாலங்காரம். (15)

16 தரணி யனைய நிறத்தண்ண லாரிரந் தன்றளந்த
தரணி யனைய னிறைஞ்சயி லார்நற் றனிச்சிலையாந்
தரணி யனைய னகனணை யந்தரி தந்திடுகந்
தரணி யனையனெஞ் சேயலர்த் தாள்க டரித்திறைஞ்சே.

(பதப்பிரிவு)

[1] தரணி அனைய நிறத்து அண்ணலார்; இரந்து அன்று அளந்த
[2] தரணியன் அயன் இறைஞ்சு [3] அயிலார்; நல்தனிச் [4] சிலையாம்
தரணியன், [5] ஐ, அனகன் அணை [6] அந்தரி தந்திடு கந்
தர்; [7] அணி அல்லையல் நெஞ்சே! அலர்த்தாள்கள் தரித்து இறைஞ்சே

(ப - ரை.) தரணி அனைய நிறத்து அண்ணலார் - ஞாயிற்றைப் போன்ற சிவந்த நிறச் செம்மலும்;

அன்று இரந்து அளந்த தரணியன் அயன் இறைஞ்சு அயிலார் - (வாமனனாக வந்த) அந்நாளில், (மாவலியிடம மூவடி மண்) யாசித்து, (உலகை) அளந்து கொண்ட திருமாலும்;

அயன் இறைஞ்சு அயிலார் - பிரமனும வழிபடும் (ஞான) வேல் ஏந்திய நாதரும;

நல் தனிச் சிலையாம் தரணியன் - நலஞ்சிறந்த ஒப்பற்ற வில்லாகிய மலையை யுடையவரும்;

ஐ அனகன் அணை அந்தரி தந்திடு கந்தர்-அழகரும், எக்களங்கமும் இல்லாதவருமான தற்பர சிவனார் தழுவிய மாதேவி தந்த மைந்தர்;

---

1. தரணி - சூரியன். 2. தரணியன் - உலகிற்குரிய திருமால். 3. அயில் - வேல். 4. சிலையாம் தரணியன் - வில்லாக மலையை உடையவன்; தரணி - மலை; உருவகம். 5. ஐ - அழகன். 6. அந்தரி - உமாதேவி. 7. அணி அல் - அருமைக் காப்பு.

அணி அல் - (கனிந்த நமக்கு) அழகிய காப்பாளராக இருக்கின்றார் ;

நையல் நெஞ்சே - (எதற்கும்) வருந்தாதே மனமே !

அலர்த் தாள்கள் தரித்து இறைஞ்சே - (திருச்செந்தில் பிரபுவின்) செந்தாமரை மலர்போன்ற திருவடிகளை, (வாய்த்த) உள்ளத்தில் வைத்து, (எட்டு உறுப்பும் நிலம் தோய, திருமுன்) விழுந்து வணங்கு, (எ - று).

விரிவுரை

மாவலிபால் மூன்றடி மண்ணிரந்து உலகளந்த திருமாலும், அவரது உந்தியில் உதித்த நான்முகனும், விநயங் காட்டி வழிபடும் வேல் உடையான் ;

இமையவரும் முனிவர்களும் இருந்து தவம் புரியும் பொன் மலையை, வில்லாக வளைத்தவரும் ;

அழகு மயம் ஆனவரும், எந்தக் களங்கமும் இல்லாதவரும், இறைவர் தழுவிய இறைவி யருளிய மைந்தருமான கந்தப்பெருமான்;

சிறந்த ஒளி பரப்பிப் புறஇருள் ஒழிக்கும் பரிதிபோல், அக இருள் அழிக்கும் செவ்வொளித் திருமேனிச் செவ்வேளாயுளர். அவர் என்றும் உனைக் காப்பாற்ற இருக்கின்றாரே !

நாள்கள் கோள்கள் நலமில்லை என்று நையாதே ; வாய்ப்பான செல்வம் இல்லையென்று வருந்தாதே ; மனை மக்கள் சுற்றம் சரியில்லை என்று மாழ்காதே ; உடல் பிணிகண்டு உலையாதே !

தொல்லை அனைத்தும் தொலைய வேண்டுமேல், வா. திருச்செந்தூரான் திருவடிகளைத் தியானம் செய் !

'காக்கக் கடவிய நீ காவா(து) இருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா !—பூக்கும்
கடம்பா ! முருகா ! கதிர்வேலா ! நல்ல
இடங்காண் இரங்காய் இனி !'

என்று இறைஞ்சு ! துன்பம் அனைத்தும் தூரம்போம். அனுபவ இன்பம் அணுகிவரும் என்றபடி.

அண்ணலார் - பெருமையிற் சிறந்தார் எனும் பொருட்டு. தரணி - பரிதிக்கும், நிலத்திற்கும், மலைக்கும் ஒவ்வொரு காரணம் பற்றி உண்டான பெயர். சிலை - வில் ; சிலைத்தலை யுடையது எனும் காரணப் பெயர் ; சிலைத்தல் - நாணியை யீர்த்துவிடும் ஒவ்வொரு நேரத்தும், ரீங் ரீங் என்ற ஒலி விளைதல். மற்று, சிலீமுகம் கொள்வது சிலை எனினுமாம். சிலீமுகம் - அம்பு. அயில் - (ஞானக்) கூர்மை,

ஐ - அழகு ; முதன்மையுமாம்.

பரந்த உலகம் பல படைப்பானும் காப்பானும், வணங்கும் தெய்வம் முருகன் காண்! முதலாளியான முதல்வர் தழுவிய முதல்வி தந்த அந்த செந்தில் கந்தன் துணையுண்டு; கலங்காதே மனமே என்பது கருத்து.

அனகன் அணே அந்தரி - (தவத்தால்) அனகனைத் தழுவிய ஆகாய வடிவி எனினுமாம்.

அத்தேவியின் செயல், ஆன்மாக்கட்கு ஒரு சமிக்ஞை. அது போல், உமை குமரன் திருவடிகளை, உளத்திற் புணர்ந்து கொள்; புறத்தில் வணங்கு என்பது, இங்குள உள்ளுறை.

அந்தரம் - ஆகாயம். அந்தரி - ஆகாய வடிவி. மற்று, அழகிய தரத்தினள் எனினுமாம். (16)

17 தரிக்கனந் தங்கலை நீள்சடைக் கைக்கனற் சங்கரனந்
தரிக்கனந் தங்கலை நீதிகள் சாற்றரன் றந்தநற்கந்
தரிக்கனந் தங்கலை நீர்ச்செய்க்க ணுஞ்செந்தி லார்தளையா
தரிக்கனந் தங்கலை நீத்திழந் தேங்கரச் சங்கங்களே.

(பதப்பிரிவு)

[1] தரிக்க, [2] நந்து அம்கலை நீள்சடைக், கைக்கனல் சங்கரன்; அந்தரிக்கு, அனந்தம் கலை நிதிகள் சாற்று அரன் தந்த நல் கந்தர்; [3] இக்கு [4] அனம் தங்கு அலைநீர் [5] செய்க்கண் ஆம் செந்திலார்; [6] தளை ஆதரிக்க, நந்தம் [7] கலைநீத்து இழந்தேம் கரச் [8] சங்கங்களே.

(ப - ரை.) தரிக்க நந்து அம் கலை நீள் சடை கைக்கனல் சங்கரன் - (தன்னைச்) சூடிய அளவில், ஆக்கம் எய்திய அழகிய கலைகளை யுடைய சந்திரன் இருந்த (மிக) நீண்ட சடையையும், திருக்கரத்தில் நெருப்பையும் கொண்டவரான சங்கரப்பெயர் கொண்ட சதுரரும் ;

அந்தரிக்கு அனந்தம கலை நிதிகள் சாற்று அரன் தந்த நல்கந்தர் - அம்பிகைக்கு அளவிலாத அருள் நூற்களின் நியதிகளை, (உயிர்கள் உய்ய) உபதேசித்தவருமான தற்பரர் அருளிய கந்தப் பெருமான் ;

---

1. தரிக்க - அணிந்த அளவில். 2. நந்து - வளர்ந்த. 3. இக்கு - கரும்பு. 4. அனம் - அன்னம்; இடைக்குறை. 5. செய்க்கண் - வயலில். 6. தளை ஆதரிக்க - மாலையை விரும்ப. 7. கலை - ஆடை. 8. சங்கங்கள் - வளையல்கள்.

இக்கு அனம் தங்கு அலை நீர் செய்க்கண் ஆம் செந்திலார் - கரும்புகள் உயர்ந்து, அன்னங்கள் விளையாடும் அலைகளை யுடைய நீர்வளமுள்ள வயல்கள் சூழ்ந்த செந்தில் பதியில், எழுந்தருளி யிருக்கின்றார் ;

தளை ஆதரிக்க - (அவருடைய வித்தகக் கடப்பமலர்) மாலையை விரும்பிய அளவில் ;

நம்தம் கலை நீத்து-நமது உடை நெகிழ்ந்து அவிழ்ந்து விழுந்து;

கரச் சங்கங்களே இழந்தேம் - கையில் இருந்த சங்கு வளையல் கள் (கழன்று விழ, அவைகளையும்) இழந்தோம், (எ - று).

விரிவுரை

மதியணிந்த மாண்பு

கேண்மையுடைய என் சொற்களை நீ கேட்கவில்லை ; ஒவ்வொரு நாளும் உருக்குலைந்து ஒழிந்துபோ என்று, சந்திரனைத் தக்கன் சபித் தான்.

பாழும் அச்சாபத்தால், தினந்தோறும் ஒரு கலையாகச் சந்திரன் தேயலாயினன் ; மயங்கிப் படபடத்தது மனம்.

உயிர்ப் பிச்சை உதவுங்கள் என்று, பொன்னுடர் எவரிடமும் ஓடி ஓடிப் புகல் புகுந்தான்.

அதிர்ந்த வானோர், தக்கனுக்கு அஞ்சினர். காப்பார் இன்றிச் சந்திரன் கைவிடப் பெற்றான். இதற்குள், பதினைந்து கலைகள் பாழா யின. எஞ்சி யிருந்தது ஒரு கலைதான்.

பெருகிய தெளிவு அறிவில் பிறந்தது. கயிலை யடைந்தான். புனித சிவ சந்நிதியில் புகுந்தான். அபயம் பிரபோ! அடைக்கலம் துரையே! என்று அலறினான்.

கருணையே வடிவான கண்ணுதல் பெருமான், வெடுவெடுத்தார். இருந்த ஒரு கலையை எடுத்தார். வாழ்விக்கும் தம் திருமுடி மேல் வைத்தார். உய்ந்தது சந்திரன் உயிர். அதன்பின் அவன், அழு தான் தொழுதான் ஆரந்தித்தான்.

> 'நெற்றியங் கண்ணுடை நிமலத் தெம்பிரான்
> உற்றவர்க்(கு) அருள்புரி கின்ற உண்மையைத்
> தெற்றென உணர்த்தல் போல், திங்களின்கலை
> கற்றையஞ் சடைமிசைக் கவின்று பூத்ததே!'

என்று இவ்வரலாற்றை, அருமை பெறக் கந்தபுராணம் அறிவிக் கின்றது.

உயர்கலை உபதேசித்தது

ஆணவத்தில் அழுந்தும்; மாயையில் மயங்கும்; கன்மத்தால் ஆன்மாக்கள் கண் கலங்கும்; இது என்றும் உள்ள நியதி.

தெளிவு பிறந்தால், தொல்லை பல தொலையும். தெளிவு பிறக்க யாது வழி? சிவனார் இது குறித்து, திருவுளத்தில் சிந்தித்தார்.

காணப்படுவது எல்லாம் சக்தி சொரூபம்; கருதப்படுவது சிவ சொரூபம் ஆதலின், காணப்படும் தேவியின் மூலம், ஆன்மாக்கட்கு அறிவு கற்பிக்க எண்ணினர் அமலர்.

வாழ்விக்கும் வழிமுறை யான அஹம் பிரமாஸ்மி, தத்வமஸி முதலிய மகா வாக்கிய ஞான மகிமைகளை, உமாதேவிக்குப் பல காலம் சிவபிரான் ஓதினர்.

சரியை கிரியை யோகம் முதலிய சதுரப் பாடுகளையும், விரிவாக எடுத்து விளக்கினர். அவ் விளக்கங்களே வேதாகமங்கள் ஆயின.

தேவியின் மூலம், பேறுதரும் அவைகளைப் பெற்று, ஓதி உணர்ந்து உய்கிறது உலகமெலாம்.

பிறையணி திருமுடிப் பெருமானுகி, உமாதேவிக்கு அளவிலாத கலைகளை உபதேசித்த, அந்த அரனார் தந்த மைந்தர் கந்தர்.

வாய்த்த கரும்புகள் விளையும் வயல்களில், வித்தக அன்னங்கள் விளையாடுகின்ற இன்பச் செந்திலில், அவர் எழுந்தருளி யிருக்கின்றார்.

நான் ஒரு பெண்பால். சென்றேன். சிறந்த பவனியில் பெருமானைச் சேவித்தேன். அவர் மாலையணி அழகர். கம்பீரமான அம்மாலையைக் கண்டேன்; என்னையும் அறியாமல், என்னிடம் ஒருதலைக் காதல் உதித்தது.

ஆசைப்பட்டால் போதுமா? தற்பர முருகனைத் தழுவுதல் என்பது, எளியதா? அப்பரன், தரித்த மாலை ஒன்று தந்தால் போதுமே!

வரத செந்திலான், அதையேனும் வழங்குவனு? சிறக்க அந்த அருட்கொடை செய்வனு?

அந்தக் கடப்ப மாலை, அவன் போக வடிவன் என்பதன் அடையாளம் அல்லவா! அதனுல்தான், நம்பன் அவன் மேல் என் மனம் நாடுகின்றதா?

இப்படியே எண்ணி யெண்ணி, உடலில் சூடு உறைத்தது. அந்த வெம்மையால், உடலும் இளைத்தது. இளைத்ததால்,

உடுத்திய உடையோ நெகிழ்ந்து அவிழ்ந்து சரிந்தது. கை வளையல்களும் கழன்று விழுந்தன.

இப்போது, செயற்கைக் கோலம் சிதைந்துபட, இயற்கையான் திருமுன், இயற்கைப் பிறப்பாய் இருக்கின்றேன் என்றபடி.

இது, முருகன் உலாவியல் கண்டு, மால்கொண்ட மகளிர்உரை என்னும் துறை.

> " விரைகமழ் தூநீராடி விரிதுகில் வேறிடாமல்
> தெருவெலாம் தாமே யானார் "

எனக் கண்ணன் வருகையை ஆவலித்த அத்திருபுர அரிவையரை வில்லிபுத்தூர் ஆழ்வாரும், இராமன் பவனி வரக்கண்ட மிதிலை மாதர் மன நிலையைக் கம்பர் கூறும் உலாவியற் பட்லமும்,

> ' வலத்தயன் வரவு காணாள்; மாலிடங் காணாள்; மண்ணோர்
> குலத்தையும் காணாள்; வானோர் குழாத்தையும் காணாள்; ஞானப்
> புலத்தவர் போலக் கண்ட பொருளெலாம், மழுமான செங்கைத்
> தலத்தவன் வடிவாக் கண்டாள் ஒருதனித் தையல் மாது '

என மீனாட்சி சுந்தரேசர் பவனிகூறும் பரஞ்சோதி முனிவரும், இது குறித்துக் கூறும் குறிப்புகள் கோடிபெறும்.

*எமது திருக்கைலாய ஞானவுலா விரிவுரையில், உலாவியலில் உள்ள வித்தகத் தத்துவ விளக்கம் பலஉள. அதை அதனில் அறிக.

> " நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே
> நீ வந்த வாழ்வைக் கண்(டு) அதனாலே
> மால் கொண்ட பேதைக்(கு) உன் மணநாறும்
> மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே."

என அருணை முனிவர் கூறும் குறிப்பும், இங்குக் குணிக்கத் தகும். (17)

18 சங்கரி யக்க நிகர்த்தநின் ருதை தகையதென்னச்
சங்கரி யக்க ரிறைஞ்செழிற் செந்திற் சடானனகஞ்
சங்கரி யக்கதிர் தானிசை கின்ற சரணத்தினாற்
சங்கரி யக்கணத் தேயெற் செறியந் தகற்சினந்தே.

---

* குகஶ்ரீ ரஸபதி எழுதிய இவ்விரிவுரை, அமிர்தவசனி காரியாலயம் 54 பந்தர் தெரு, சென்னை எனும் விலாசத்திற் கிடைக்கும்.

(பதப்பிரிவு)

[1]சங்கரி [2]அக்கம் நிகர்த்த நின் தாதை [3]தகையது என்னச்,
[4]சங்கு [5]அரி [6]யக்கர் இறைஞ்சு எழில் செந்தில் [7]சடானன;கஞ்
சம் கரியக் [9]கதிர்தான் இசைகின்ற சரணத்தினால்,
[10]சங்கரி, அக்கணத்தே எற்செறி [11]அந்தகற் சினந்தே.

(ப - ரை.) சங்கரி அக்கம் நிகர்த்த நின் தாதை தகையது என்ன - (கருணையே உருவமான) உமாதேவியின் கண்களைப் போன்ற, (அருமை யுடைய) உமது தந்தையாம் சிவத்தின் தகுதியான செயல் எனும்படி ;

சங்கு அரி யக்கர் இறைஞ்சு எழில் செந்தில் சடானன - பாஞ்ச சன்யம் ஏந்திய (பரம) திருமாலும், இயக்கர்களும், (வாழ்வு பெறக் கருதி) வணங்குகிற (அருமைத்) திருச்செந்தூரில் எழுந்தருளிய ஆறுமுக அப்பா !

கஞ்சம் கரியக் கதிர்தான் இசைகின்ற சரணத்தினால் - கமல மலரும் கருகும்படி, பரவிய ஒளி பதிந்த (உமது) புகல் அளிக்கும் (புனிதத்) திருவடிகளால் ;

எற் செறி அந்தகற் சினந்தே, அக்கணத்தே சங்கரி - (பாய்ந்து) என்னைப் பற்றப் படரும் குருட்டு இயமனைக் கோபித்து, (அவனை) அந்தக் கணத்திலேயே அழித்துவிடும், (எ - று).

விரிவுரை

அம்பிகை நோக்கு அருள் நோக்கு. அந் நோக்கைப்போல் மலர்ந்த அருள் மேனியர் நீர்.

பக்தர் மார்க்கண்டேயரைப் பற்றவந்த இயமன், வெடுவெடுத்துப் பாசம் வீசினான். அன்பன் நடுங்கி அலறலை உணர்ந்த உமது அத்தர், ஓங்கி உதைத்து அவன் உயிரை ஒழித்தார்.

திருமால் ஆதியர் தினமும் பரவும் திருச்செந்தூரா ! ஆறுமுக அரசே !

---

1. சங்கரி - பார்வதி. 2. அக்கம் - கண்கள். 3. தகையது என்ன - தக்க செயல்போல. 4. சங்கு - பாஞ்சசன்யம். 5. அரி - திருமால். 6. யக்கர் - யட்சர்; இவர்கள் தேவர்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள். 7. சடானன - ஷட் ஆனன; ஆறுமுகா. 8. கஞ்சம் கரிய - செந்தாமரை, கருந்தாமரையாக. 9. கதிர் - ஒளி; தான் - அசை; தேற்றப் பொருட்டுமாம். 10. சங்கரி - அழித்துவிடு. 11. அந்தகன் - இயமன்.

அந்த அந்தகன் எனை அடர்ந்து வரும் அமயம், கண்ணுதல் இறைவர் அன்று கனன்ற தன்மைபோல், அன்றே அப்பொழுதே உமது தெய்வக் கமலத் திருவடியால், உருத்து அக்குருட்டு இயமனை ஒழித்துவிடும் என்பது கருத்து.

தந்தை செயல், தநயர்க்கும் உரித்து என்பது குறிப்பு. அடைக்கல நிலயமான அருமைத் திருவடிகளை, சரணம் எனறது மறக்க முடியாத மதி நலம். இளைப்பாற்றும் எம்பெருமாட்டியை, 'சங்கரி' என்று சதுர்பட மொழிந்தார்.

> 'நல்லார் என்னுன் ; நல்குரவு அறியான் ;
> தீயார் என்னுன்; செறுநர் என்று உன்னுன் ;
> தரியான் ஒருகணம் தறுகணன் பாவி ''

என்ப ஆதலின், இயமனை அருள்விழி யிலாதவன் எனும் பொருளில், 'அந்தகன்' என்றார்.

இறுதி யடியிலுள்ள 'சங்கரி' என்பது, அழி, ஒழி எனும் அருமைக் குறிப்பு. (18)

19 தகர னலங்க நிறைநிறத் தான்செந்திற் றந்தைசங்கேய்ந்
தகர னலங்க னளின தனத்தினன் றாழளகந்
தகர னலங்க டரநின்ற சத்தியன் றாளெனினந்
தகர னலங்கனன் றுலெனச் சிறிடத் தக்கரன்றே.

(பதப்பிரிவு)

[1]தகரன்;நல் [2]அங்கம் நிறை நிறத்தான்; செந்தில் தந்தை; சங்கு ஏய்ந்த,[3]கரன்; [4]அலங்கல் [5]நளின ஆதனத்தினன் [6]தாழ், அளகம் [7]தகர நலங்கள் தரநின்ற [8]சத்தியன் தாள எனின்,[9]அந்தகர், அனலம் கனன்றால் எனச், சீறிடத் தக்கர் அன்றே.

(ப - ரை.) தகரன் - ஆட்டு ஊர்தியை யுடையவன் ; நல் அங்கம் நிறை நிறத்தான் - புனித உறுப்புகள் நிறைந்த புகழாளன் ;

செந்தில் தந்தை - திருச் செந்திலில் எழுந்தருளியுள்ள தெய்வத் தந்தை ;

---

1. தகரன் - ஆட்டு வாகனன். 2. அங்கம் - உறுப்பு. 3. கரன் - திருக் கரத்தை யுடைய திருமால். 4. அலங்கல் - மாலை. 5. நளின ஆதனத்தினன் - கமல பீட நான்முகன். 6. தாழ் - வணங்கும். 7. தகரம் - மயிர்ச்சாந்து. 8. சத்தியன் - தேவயானை மணாளன். 9. அந்தகர் - குருடரான யமன்.

சங்கு ஏய்ந்த கரன், நளின ஆதனத்தினன் தாழ் - பாஞ்சசன்யத் திருக்கரப் பரந்தாமனும், அழகிய கமல அணையில் அமர்ந்த அயனும், தாழ்வெனும் தன்மையுடன் வணங்கும் ;

அளகம் தகர நலங்கள் தர நின்ற சத்தியன் தாள் எனில்— மயிர்ச் சாந்தணிந்த கூந்தலை யுடைய மங்களம் உதவ இருந்த தேவ யானையார் மணாளன் திருவடிகள் என்று, உச்சரித்த அளவில் ;

அந்தகர் அனலம் கனன்றால் எனச் சீறிடத் தக்கர் அன்று - குருட்டு யமனார் நெருப்புக் கொழுந்து விட்டதுபோல் கோபிக்கத் தக்கவர் ஆகார், (எ - று).

விரிவுரை

அனலில் உதித்துக் கொதித்த ஆட்டை, ஊர்தி யாக்கிய அத்தன் திருவடிகட்கே அடைக்கலம் என்ற மாத்திரத்தில், கன லெனக் கனன்று கட்டிப்பிடிக்க வரும் காலன், ஆரவாரிப்பு அடங்கி அமைதி பெறுவன்.

அயிலும் மயிலும் அறமும் நிறமும் அழகுமுடைய பெருமான், உறுப்பு நூலோர் உவந்து கொளும்படி அடிமுதல் முடிவரை அமைந்த அங்கங்களும், நிறைவும் நிறமும் புகழும் கொண்ட புனிதன் திருவடி என்றதும், கொதித்த யமன் உள்ளம் குளிர்ந்து விடும்.

செந்தில் தந்தை தாள் என்றக்கால், மறலி யுள்ளம் மகிழ்ச்சி யடையும்.

மங்களம் வழங்கும் தேவயானை மணாளன் தாள் என்ற அளவில், இயமன் வந்த வேலையை மறந்து, திகைத்து, வந்த வழியே திரும்புவன் என்றபடி.

துணை என்ற அளவு கூடச் சொல்லா முன், தாள் என்ற அளவு கேட்டுத் தகைய வந்தான் சீற்றம் தணிந்துபடும் என்னுமிது, இன்ப அன்பர்க்கு இயமபயம் இல்லை என்பதை அறிவிக்கின்றது அல்லவா! ' நல் அங்கம் நிறை நிறத்தான் ' என்பதை,

> ' தற்புருடம் ஈசானம் சத்தியோ சாதமதி
> அற்புத வாமம் அகோரமும்—பொற்பார்
> முகமெனும் சத்தி முகமொன்றாய் நிற்கும்
> முகமே இறைசண் முகம் '
>
> ' பூமியினைப் பொன்னதனைப் பூவையரைப் புத்திரரை
> நாமிடலை வெற்றியினை நாகமதை—ஓமில்
> விரிவித்தை முத்திகளை வேட்போர்க் கருள்செய்
> கருணைநிலை யேகந்தன் கண் '

'நூல்கள்தா யாம்வேத நூலாக மங்கட்கும்
வால்கெடா மெய்ம்மைக்கும் வாக்குவலி—யால்வெளியாம்
எல்லா மொழிமூலத் திற்கும் இருக்கைநிதம்
நல்லார் தொழும் குமரன் நா'

'அடிகேள் அடிகேள் அடியீஎன் றேத்தும்
அடியார் கவிச்சுவையை அன்பால்—உடனுகர்ந்து
நல்வற் சலமபெருகு நாதசத் திக்கிருக்கை
செல்வக் குமரன் செவி'

'அன்பூற் றெடுக்க அடிநாடி நிற்பவர்கட்கு
இன்பூற் றெடுக்க இனிதருளித்—துன்போட்டும்
'மாசில் அபய வரதங்கள் எனபவே
காசின் முருகையன் கை'

'ஆன்மாக்கள் நோக்கம் அறியும் குணமொன்றே
தான்மீக்கொள் ஞானமெனும் சத்தியுமவ்—ஆன்மாக்கள்
ஊழ்வினைகள் ஊட்டியருள் ஒண்கிரியா சத்தியுமே
காழ்வடிவுச் சேயிரண்டு கால்'

எனும் பாம்பன் அடிகள் பாடிக் காட்டுவதிலும் படிக்கத் தகும். (19)

20 தக்க னகத்தி னடறணித் தானயன் றன்கதிசந்
தக்க னகத்தி கிரிக்கர ணக்கங்க டந்தளிக்கத்
தக்க னகத்தி யனையாளி யென்னெஞ்ச தாஞ்சலசந்
தக்க னகத்தி னகரன்றன் செந்திலைச் சந்திக்கினே.

(பதப்பிரிவு)

[1]தக்கன் அகத்தின் [2]அடல் தணித்தான், அயன்தன்கதி,சந்
தக் கனகத் திகிரிக்[3]கரன் [4]ஆக்கங்கள் தந்து, அளிக்கத்
[5]தக்கன்; அகத்தியனை ஆளி; என் நெஞ்சதாம் [6]சலசம்
தக்கன், [7]நகு அத்[8]தினகரன் தன் செந்திலைச் சந்திக்கினே.

(ப - ரை.) அகத்தியனை ஆளி - அகத்திய முனிவரை ஆட்கொண்டவன்;

என் நெஞ்சதாம் சலசம் தக்கன - எளியேனது மனமாகிய தாமரையில் எழுந்தருளி யிருக்கும் தகுதியோன்;

---

1. தக்கன்-தட்சன். 2. அடல்-உரம். 3. கரன்-திருமால். 4. ஆக்கம் - பதவி. 5. தக்கன்-தகுதியன். 6. சலசம் - தாமரை. 7. நகு - விளங்கும். 8. தினகரன் - சூரியன்.

நகு அத் தினகரன் - பேரொளிப் பிழம்பான அந்த அநாதி நித்திய (ஞான சூரியனான) கந்தப் பரமன் ;

தன் செந்திலைச் சந்திக்கின் - எவரேனும் தனது திருச்செந்தூரைச் சேவிக்க வந்தாரேல், (அவர்கட்கு,)

தக்கன் அகத்தின் அடல் தணித்தான் (கதி) - தட்சனுடைய (அடங்கா) மன இறுமாப்பை அடக்கிய (பரம) உருத்திரன் பதவியையும் ;

அயன் கதி - (பழைய) நான்முகன் பதவியையும் ;

சந்தக் கனக திகிரிக் கரன் ஆக்கங்கள் - அழகிய பொன்னிற ஆழி ஏந்திய (சிறந்த) திருமாலின் செல்வங்களையும் ;

தந்து அளிக்கத் தக்கன் - (தாராளமாக) உதவி, அருள் பாலிக்கும் தகுதியன் ஆவன், (எ - று).

விரிவுரை

அரனையும் மறந்தான் ; பெற்ற வரனையும் மறந்தான். மாபெரும் நந்திதேவர் சாபத்தை மறந்தான் ; ததீசி உபதேசத் தகுதியை மறந்தான்.

" எனக்கும் எவர்க்கும் இறைவன்
தனக்கும் எவனோ தவறே ?"

" இழைப்பாய் இழைப்பாய் இனியாகம் ?
பிழைப்பாய் பிழைப்பாய் பிதாவே ?"

என்று தாட்சாயணியார் அருளிய மாபெரும் நுட்பத்தையும் மறந்தான்.

ஆக்கல் காத்தல் அழித்தல் மூன்றும், என்னால் செய்ய இயலும்; எனக்குமேல் எவரும் இல்லை ; உளரென உரைப்பார் சொல்லையும் ஒப்ப மாட்டேன் என்று, தருக்கொடு நின்றான் தட்சன்.

இந்நிலையில், அவன் சிவத்தை மறுத்துச் செய்த வேள்வியை, அழிவு செய்தார் அகோர வீரர்.

அதற்கு உடன்பட் டிருந்தாரையும் ஒறுத்தார். தக்கன் தலையையும் தள்ளினர். அவன் தலையை, விறுவிறுத்த ஒரு பூதம் விழுங்கியது.

இரக்கம் கொண்ட சிவபிரான், தேவியொடு எழுந்தருளி, இறந்தார் யாவரையும் எழுப்பினன்.

எங்கே தட்சன் தலை ? எங்கும் தேடியும் அகப்படவில்லையே !

உடனே, 'ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக் கூட்டி' வைத்து எழுப்பினன் இறைவன். அதன்பின் தட்சன் ஆட்டுத் தலையன் ஆயினன். இதை எண்ணினான். கண்ணீர் சிந்தும் கண்ணினன் ஆயினான். அழிந்தது மனத்திமிர். அரோஹர! அரோஹர என்று அலறினான். அதன் பின் செம்மைத் தவத்தைச் செய்தான். சிவகணத்தவருள் ஒருவனாகிச் சிறந்தான் என்பது, இதனில் உள்ள வரலாறு.

ஐந்தாம் சங்கர சொரூபர் அகத்தியர் என்பர். செந்தமிழும் சிவஞானமும் சித்திக்க, அவர்க்குக் குமரன் அருளினன்.

அரும் பெரும் தவத்தவரான அவரை ஆட்கொண்ட பெருமான், எளியேனது இதய கமலத்தும் இருக்கின்றான். அந்த அருளாளன், பேரொளி வழங்கும் அநாதி ஞான சூரியன் ஆவன்.

அந்த எம்பெருமான், செந்திலம் பதியில் இனிது எழுந்தருளி இருக்கின்றான். சிறந்த அத்தலத்திற்குச் சென்று, சிவகுமரனைச் சந்திக்கும் சந்திப்பு உற்சவம் நடத்துவதுதான் நலம்.

செந்தில் சென்றபின், சிந்தனை பிறிதிடத்திற் செல்லாதாயின், சீவன் சிவகுமாரனைச் சந்திக்கும். அதனால் யாதுவிளையும் தெரியுமா?

உருத்திர பதவி, வைகுந்த பதவி, பிரம பதவியை வழங்கும் அந்த வள்ளல் என்று, உண்மையை உணர்ந்து ஓதிய நுண்மையை மறவாதாரே பிறவாதார்.

கதி என்பதை, அடல் தணித்தான் கதி, அயன் கதி யென இரண்டிடத்தும் கூட்டுக.

மூன்றும் அடியில் உள்ள தக்கன் என்பது, (தந்து காக்கத்) தக்கவன் என்ற பொருளையும், நான்காம் அடியில் உள்ள தக்கன் என்பது, (தங்கி யிருக்கும்) தகுதியன் எனும் பொருளையும் தந்தன

இறுதி யடியில் உள்ள நகத் தினகரன் என்பதை, நகு அ தினகரன் எனப்பிரிக்க; நகுதல் - விளங்குதல்; அ - பண்டறி சுட்டு. தினகரன் தினத்தைச் செய்பவன். (20)

21 சந்தத்த னத்திக டந்திறத் தாசை தலத்தினிச்சை
சந்தத்த னத்தி னசைதீ ரடியன் றனதிலிற்சேர்
சந்தத்த னத்தி யதளான் றனய தடக்கயல்கஞ்
சந்தத்த னத்தி னினங்கீ ழிழிசெந்திற் றங்கினற்கே.

(பதப்பிரிவு)

[1]சந்தத் தனத்திகள்தம் திறத்து ஆசை, [2]தலத்தின் இச்சை,
[3]சந்தத் தனத்தின் நசைதீர்; அடியன் தனது [4]இல்இல்சேர்
[5]சந்து அத்தன், [6]அத்தி அதளான் தனய! தடக்[7]கயல் கஞ்
சம்[8]தத்த, [9]நத்தின் இனம் கீழ்இழி செந்தில் தங்கினற்கே.

(ப - ரை.) அடியன் தனது இல் இல் சந்து சேர் அத்தன் - அடியவரான ஆளுடை நம்பிகளின் இல்லத் துணைவியரான பரவை யார் இல்லத்திற்குச் சமாதானத் தூதரர்கச் சென்ற சதுரரும்;

அத்தி அதளான் தனய - (பொல்லாத) யானையின் தோலை உரித்துப் போர்த்தவருமான சிவனுர் தந்த செல்வனே!;

தடக் கயல் கஞ்சம் தத்த நத்தின் இனம் கீழ் இழி செந்திலில் தங்கினற்கே - கம்பீரமான கயல்மீன்கள் தாமரை மேல் தாவிக் குதிக்க, (அத் தாமரைமேல் உறங்கிக் கொண்டு இருந்த கொழுவிய) சங்குக் கூட்டங்கள், (அதனில் இருந்து) கீழே இறங்கும் (வளமார் அருள்நிறை) செந்திலில் தங்கிய அடியேற்கு;

சந்தத் தனத்திகள்தம் திறத்து ஆசை - (புனித) சந்தனக் குழம்பு பூசிய குயங்களை யுடைய பூவையர்மேல் உண்டாகும் அடக்க முடியாத ஆசையையும்;

தலத்தின் இச்சை - (இருந்த) மண்மேல் உண்டாகும் இச்சையையும்;

சந்தத் தனத்தின் நசைதீர் - ஆரவாரப் பணத்தின்மேல் உண்டாகும (நாசகரமான) நசையையும் அழித்துவிடும், (எ - று).

விரிவுரை

அன்பில் உயர்ந்தவர் ஆளுடை நம்பிகள். அவர் ஒருநாள், திருவாரூரில் கனிவுமிக்க பரவையாரைக் கண்டார். கண்டதும் காதல் கொண்டார். அங்கிருந்து பரவையார் அகன்றார்.

'பாசமாம் வினைப் பற்றறுப்பான், மிகும்
ஆசை மேலுமொர் ஆசை அளிப்பதோர்

---

1. சந்தத் தனத்திகள் - சந்தனம் தடவிய முலை மாதர். 2. தலம் - பூமி. 3. சந்தத் தனம் - ஆரவாரம் விளைவிக்கும் பொன்; சந்தம் - அழகுமாம். 4. இல் இல் - இல்லத் துணைவியார் இல்லத்தில். 5. சந்து - சமாதானம். 6. அத்தி அதள் - யானைத் தோல். 7. கயல் - சேல்மீன். 8. தத்த - தாவிக் குதிக்க. 9. நத்தின் இனம் - சங்குக் கூட்டம்.

தேசின் மல்கி, என் சிந்தை மயக்கிய
ஈசனூர் அருள், எந்நெறிச் சென்றதே?

பெருமான் திருவருள் பெண்ணுருக் கொண்டது; மயங்கா என் மனத்தை மயக்கியது; அந்த அருள், சென்றவழி தெரிந்திலதே என்று திகைத்தார்.

அவர் மனநிலையை யறிந்த அமலர், அவரை அவர்க்கு மணம் செய்து வைத்தார். பலகாலம் பரவையாருடன் இணங்கி யிருந்த நம்பிகள், சிவதல யாத்திரையில் சிந்தனை செலுத்தினர்.

பரவையார், திருவாரூரிலேயே அடியவர்க்கு அன்னம் பாலிக்கும் அருந்தொண்டாற்றி யிருந்தார்.

செலவிற்குப் பணம் வேண்டும் போதெல்லாம், யாத்திரையில் இருக்கும் நம்பிகட்கு ஆள் அனுப்புவது அவர் செயல்.

பரமனைப் பாடி, பணம் வாங்கி யனுப்புவது இவர் செயல்.

மற்றொரு சமயம், திருஒற்றியூரில் இருந்த சங்கிலியாரைக் கண்டு காதலித்த நம்பிகள், என்றும் நின்னைப் பிரியேன் என்று, ஆணையிட்டு அவரை மணந்தார். சிலகாலம் அவருடன் இருந்தார்.

ஒருநாள், நிமல திருவாரூர் நினைவில் எழுந்தது. உடனே புறப்பட்டார். ஆணை மீறியதால் கண் இழந்தார். என்ன ஆனாலும், சென்று திருவாரூரைச் சேவிப்பேன் என்று புறப்பட்டார். இடக் கண்ணை, சத்திதத்துவப் பிருதிவி தலமான கச்சியில் பெற்றார்.

சிவதத்துவ பிருதிவி தலமான ஆரூரில், வலக்கண்ணைப் பெற்றார்.

அரிய இவ்வரலாறுகளை, பரவையார் அறிந்தார்.

சங்கிலியில் கட்டுண்டதில் தப்பில்லை; இறை ஆணையை மீறியது பெரும்பிழை. ஆதலின், வித்தகரே யானாலும், அந்த நம்பிகள் முகத்தில் விழிக்க மாட்டேன் என்று, வெகுண்டார்.

அவர் ஊடலை நம்பிகள் அறிந்தார். அடியரை வழிபடும் பரவையார் சொல்வதும் நியாயந்தானே என்று அறிந்தார்.

ஊடலைப் போக்கி உதவுக பெரும! என்று, வீழ்ந்து பணிந்து தியாகரை வேண்டினார்.

தியாகேசர் ஒருதரத்திற்கு இருதரம் தூது சென்று, இருவரையும் சமாதானப் படுத்தி, சாந்தி செய்தார்.

இவ் வரலாற்றால், பெண்ணாசை யுடையவர்; திருவாரூர்ப் பற்றால் மண்ணாசை யுடையவர்; பாடி வேண்டும் பண ஆசையும் உடையவர் பரவை மணாளர்.

அது தவறு அல்ல. மண்ணாசையால் பலர் மயங்கினர். இவரோ தலயாத்திரை ஆசை தழுவினர்.

பெண்ணாசையால் பலர் பேதுற்றார். இருவரை மணந்தும் இவர், வெறும் உலக இச்சையை ஏலாமல், அவ்விருவரையும் அடியவர் பணிக்கு ஆளாக்கி, அவர்கள் இருவரும் அருளின் சொரூபர்கள் என அறிந்து அனுபவித்தார்.

பண ஆசையால் பாழானார் பலர். இவரோ பரனைப் பாடிப் பணம் பெற்று, உத்தம அடியார் திருப்பணிக்கு உதவினர்.

அதனால்தான் இறைவர், அவர்க்குத் தலந்தோறும் சேவை தந்தார். பாடிய போதெல்லாம் பணம் தந்தார்.

'அரவு அகல் அல்குலார் பால் ஆசை நீத்தவர்க்கே வீடு தருவ மென்று அளவில் வேதம் சாற்றிய தலைவர்', சுந்தரர்க்காக, நள்ளிர வில், பரவை மாளிகைக்கு இருதரம் தூது நடந்தார் என அறிவம்.

மூவாசைகளையும், முதன்மை நம்பிகள் கொள்ளலாம்; அவர் கொண்ட ஆசையால், அருமை அநுபவம் பல, உலகம் அறிந்தது.

அந்த ஆசைகளை என்போன்றார் ஏற்றால், விளைவதெல்லாம் விபரீதம். என்றும் விடுதலை இல்லை; ஓயாத் துன்பத்தால் உருக் குலைந்து போவேன்; அதை அறிந்தே அஞ்சினேன். செந்திலில் தஞ்சம் புகுந்தேன். மூவாசை எளிய என்னை மோதாதபடி, அருள்க ஐயா! அருள்க என்று அலறியபடி.

பெண் ஆசை எத்தகையரையும் பேதுறுத்து மாதலின், அதை, 'திறத்து ஆசை' என்றார். ஆசு - களங்கம்.

மண்ணிலே பிறந்து, மண்ணிலே வளர்ந்து, மண்ணில் மறை யும் வாழ்வை யறிந்தும், அம்மண்ணை இச்சிப்பது மாபாவம்.

செல்வம் செல்வம் என்று சென்றுகொண்டே யிருக்கும் செல்வத்தை, நஞ்சென வெறுக்காமல் நசை யடைவது நரக நடை.

காரிகையர் மேல் வைத்த காமம், இனி வேறு ஒரு கருவில் நுழைய இடம் தேடும் செய்திதான்.

மண்ணாசை உடையார் பலரை, அம்மண் தன்னுள் மறைத் துக் கொண்டிருக்கிறது.

'வெள்ளிய செங்கண் விடையான் அடியார்' வெறுக்கும் செல்வத்திற்கு, வெறுக்கை என்ற ஒரு பெயர் உண்டு.

முதல் அடியில் உள்ளது ஸ்தனம்; அடுத்த அடியது தனம். இந்த ஸ்தனம் தனம் இரண்டையும் தொடர்ந்து உச்சரிக்க உச்சரிக்க, உள்ளத்திலிருந்து உச்சிவரை உள்ள உறுப்புகள் யாவும் அதிர்வதை அறிகிறோம். ஆ! அவை என்ன அபாயகரமானவை!

பரவை வாயிலில் தூது சென்ற பரமன் குமரா! இறுமாந்த கயாசுரன் தோலை உரித்த எம்மான் சேயே! வளமார்ந்த செந்திலில் வாழும் பெரும!

அருமை நின்பதியில் அடைக்கலம் புகுந்தேன். எந்த ஆசையும், என்னில் என்றும் நேராதிருக்க அருள் என்பது கருத்து. (21)

22 தங்கச் சினகர நேராக் கலந்திச் சகநிறைந்தார்
தங்கச் சினகர நேயர் தனயன் றனக்கினிதாந்
தங்கச் சினகர நீள்செந்தி லூட்டிற் றனகரிதந்
தங்கச் சினகர நற்கன னென்னங்க டையலர்க்கே.

(பதப்பிரிவு)

தங்கு[1] அச்சின் அகரம் நேராக் கலந்து, [2]இச்சகம் நிறைந்தார்
தம் கச்சிநகர [3]நேயர் தனயன் தனக்கு, இனிதாம்
தங்கச் [4]சினகரம் நீள் செந்தில் நாட்டில், [5]தனகரி தந்
தம்[6]கச்சில் நகர,[7]நல்கனன் என்? நங்கள் தையலர்க்கே.

(ப - ரை.) தங்கு அச்சின் அகரம் நேராக் கலந்து இச் சகம் நிறைந்தார் - அமைந்த உயிரெழுத்துக்களுள் (இருக்கும்) அகரத்தைப்போல், (கம்பீரமாக உயிர்கள் தோறும்) கலந்து, (விரிந்த) இவ்வுலகில் வியாபித்தவரும்;

தம் கச்சி நகரம் நேயர் தனயன் தனக்கு இனிதாம் - தமது கச்சிப் பதியைக் காதலித்தவருமான முதல்வர் குமரனும் முருகவேளுக்கு இன்பம் தருவதான;

தங்கச் சினகரம் நீள் செந்தில் நாட்டில் - பொற் கோயில் (பொலிவு காட்டி) உயர்ந்துள திருச்செந்தூர் எனும் தெய்வப் பதியில் (உள்ள);

1. அச்சின் - உயிர் எழுத்துக்களில். 2. இச் சகம் - இவ்வுலகத்தில்; 3. நேயர் - விருப்பர். 4. சினகரம் - கோயில். 5. தனகரி தந்தம் - தனங்களாகிய யானைத் தந்தங்கள். 6. கச்சு - ரவிக்கை. 7. நல் கனன் - மிகப் பருத்தல்.

நங்கள் தையலர்க்கே - (தனிப்பெரும்) எங்கள் தலைவிக்கு ;

தன கரி தந்தம் - குயங்களாகிய யானைக் கொம்புகள் ;

கச்சில் நகர நல் கனன் என் - கச்சுள் இருந்து (வெளியே) பிதுங்கி வரும் அளவு, மிகப் பருத்தது யாது காரணத்தால்? (எ-று).

விரிவுரை

எழுத்துக்கள், உயிரும் ஒற்றும் என இருவகைப்படும். உயிருடைய பொருளும் உயிரிலாப் பொருளும் என உலகமும் இருவகைப் படும்.

அகரம், எல்லா எழுத்துக்களிலும் கலந்து அவைகளை இயக்கும்; தானும் தனித்து இயங்கும்.

அதுபோல், இறைவன் எப்பொருளையும் கலந்து, அவைகளை இயக்குவன் ; தானும் தனித்து இயங்குவன்.

அகரம் இயங்காதேல், எந்த எழுத்தும் இயங்காது ; அது போல் இறைவன் அசையானேல், ஒரு அணுவும் அசையாது.

ஆசிரியர் தொல்காப்பியனார்,

" அகர முதல னகர இறுவாய்
முப்பஃ தென்ப "

என முதற் சூத்திரத்தில் முழங்கினர். இதன்படி அகரம் முதலிலும், னகரம் இறுதியிலும் இருப்பதை அறிகிறோம்.

அந்த அருமையை அறிவிக்க எண்ணிய வள்ளுவரும்,

" அகர முதல எழுத்தெல்லாம் "

என ஆரம்பித்து, 1330 ஆம் இறுதிக் குறளில்,

" கூடி முயங்கப் பெறின் "

எனக் காட்டிய அருமையும் கருதத் தகும்.

உயிரும் மெய்யும் என இருவகையாகி,

உயிர்க்கணம்	... 12
கசடதபற எனும் வன்கணம்	... 6
ஙஞணநமன எனும் மென்கணம்	... 6
யரலவழள எனும் இடைக்கணம்	... 6
ஆக நாற்கணமும்	... 30

எனும்தொகையுள் அடங்கல், அருமையினும் அருமை.

ஒலி வேறுபாட்டால் உதிக்காமல், வாய் திறந்து எழும் ஒலி மாத்திரமான இயற்கையாப் பிறக்கும் அகர நிலை.

" மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும் "
எனும் தொல்காப்பியமும்,

' இறைவன் இயங்குதிணை நிலைத்திணை எவையினும் அவற்றின் தன்மையாய் நிற்றல்போல், அகரம் எல்லா எழுத்துக்களினும் கலந்து அவற்றின் தன்மையாய் நிற்கும் ' என்ற அதன் உரையும் இங்கு எண்ணத்தகும்.

மேலும், மொழியை அமைத்தற்குத் தொடுத்த ஒலிகளுள், அகரம் முதல் நாதம்.

வாமன புராணத்தில்,

' அகரம் எல்லாச் சொற்களுக்கும் மூலம் ஆதலாலும், பிரஹ்மம் எப் பொருட்கும் மூலம் ஆதலாலும், ' அ ' என்று பிரஹ்மத்திற்குப் பெயர் ' என்பதும், எவ்வளவு அருமையான அறிவிப்புகள்.

' அகர உயிர்போல் அறிவாகி, எங்கும் ' நிறைந்து நிற்கும் நிகரிலாத நிமலர்க்கு, வித்தகக் கச்சியில் விருப்பம் அதிகம்.

அதுபோல் அம் முதல்வர் மைந்தரான முருகவேட்கு, அளவிலாத இன்பத்தைத் திருச்செந்தூர் அளிக்கின்றது.

நலந்தரும் திருச்செந்தூர் நாட்டில், எங்கள் மகள் இருக்கின்றாள். யானைத் தந்தங்கள் போல், அவள் எடுப்பான குயங்களை யுடையவள். அதுவரை அழகுதான்.

அக்குயங்கள், மேலும் விம்மி விம்மி, கச்சைக் கிழித்துக் கொண்டு வெளிவருவது ஏன் ?

செந்தில் பிரபுவைக் கண்டாளா ? அதனால் ஒருதலைக் காதல் உதித்ததா ? அதன் விளைவா இது ?

கச்சிப் பதியில் ஏகம்பரை, காமாட்சியார் காதல் மிகுத்துக் கட்டித் தழுவினர். விம்மிய அவர் குயங்களால், வடுப்பட்டது அத் தெய்வப் பெருமான் திருமேனி.

அதுபோல், செந்தில் கந்தரைத் தழுவ நினைத்து, வேட்கை மிகுத்த இவள் தனங்கள் விம்முகிறதா என்ன ?

தலைவியின் இறுமாந்த குயங்களைக் கண்டு, ஐயங்கொண்ட செவிலித்தாய், விழித்து நோக்கிப் பாங்கியை வினவு துறை இது.

எப்பொழுதும் தலைவியின் அண்மையில் இருக்கும் தோழிக்குத்தான், விவரம் தெரியும் என்று, இப்படி வினவுகின்றாள் செவிலித் தாய்.

ஊன்றி உணரத் தக்க இவ்வுள்ளுறையில், தலைவி - ஆன்மா; தலைவன் - செந்தில் செல்வன். பாங்கி - அறிவு. மனம் - செவிலியென்பது மரபு.

கரிதந்த தனம் என்பது, தனகிரி தந்தம் என உருவகமாயது. தையல் - தைத்துக் கொள்ளத் தெரிந்தவள்; அதாவது பிறர் துணையின்றி, தன்னைக் கோலம் செய்யத் தானே அறிந்தவள். (22)

23 அலரின னந்தலை யாழிகண் டாங்குச் சிகியினிடை
யலரின னந்த நிகரயி லான்செந்தி லாயிழையை
யலரின னந்த நினைநிலந் தேர்ந்ததற் கன்றயலா
ரலரின னந்தஞ் சொலற்கிட னுநெஞ் சழிகின்றதே

(பதப்பிரிவு)

[1] அலரி [2] நனந்தலை [3] ஆழி கண்டாங்குச், [4] சிகியின் இடை
[5] அலர் இனன்; [6] அந்தம் நிகர் அயிலான் செந்தில் ஆயிழை, [6] ஐ
அலர் [7] இனல் நந்த நினை [8] நிலம் தேர்ந்ததற்கு, அன்று அயலார்
[9] அலரின் அனந்தம் சொலற்கு இடனு, நெஞ்சு அழிகின்றதே.

(ப - ரை.) ஆழி நனந்தலை அலரி கண்டு ஆங்கு - கடலின் நடுவில் கதிரவன் தோன்றினாற் போல்;

சிகியின் இடை அலர் இனன் - (ஆவரண) மயில்மேல் விளங்கும் (ஞான) ஆதித்தனும்;

அந்தம் நிகர் அயிலான் செந்தில் - அழகிய ஒளிமய வேலாயுதனுமான (விமல) நின செந்திலில்;

ஆயிழை ஐ அலர் இனல் நந்த - (எம்) தலைவி, மன்மதனது ஐந்து மலர்க்கணைகளால் விளைந்த வேதனை தீர;

நினை நிலம் தேர்ந்ததற்கு - நின்னை (இந்) நாட்டில் தெளிந்து தேடியதற்கு(ப் பயனாக);

---

1. அலரி - சூரியன். 2. நனந்தலை - நடுவில். 3. ஆழி - கடல். 4. சிகி - மயில். 5. அலர் இனன் - பிரகாசிக்கும் பரிதியான பரம குமரன். 6. ஐ அலர் - ஐந்து மலர்க்கணைகள். 7. இனல் நந்த - துன்பம் தொலைய. 8. நிலம் - (திருச்செந்தில்) பதியில். 9. அலர் - பழிச்சொல்.

அன்று அயலார் - அந்நாளில், (தலைவியின் மன நிலையைப்) பக்கத்தில் இருந்து பார்த்தவர்கள் ;

அலரின் அனந்தம் சொலற்கு இடமு - பழிமொழிகள் பல பகர்தற்கு இடமாகி ;

நெஞ்சு அழிகின்றதே - (அதனால்) வாடி மனம் வருந்துகின்றதே, (எ - று).

விரிவுரை

பேரொளிப் பிழம்பாய் மயில்மேல் வரும் பெரும ! ஆன்மாவாகிய தலைவியை, அவளை ஆள்பவனை நீ, இதுவரை களவு நிலையில் கலந்தனை ! ஊரார் இதனை உணர்ந்தனர். களவுநிலை யாதலின், பார்த்து நகைத்துப் பழிமொழிகள் பல பகர்கின்றார். இதனால் மாபெரும் வேதனை யடைகின்றது மனம்.

எங்கள் மகட்கு நீ அளிக்கும் பரிசு இதுவோ ஐயா ! நீ இனியும் காலம் நீட்டிக்க வேண்டா. மங்கையைப் பலரறிய உடனே மணந்து கொள்ளும் என்று, விநயம் காட்டித் தோழி வேண்டியபடி.

இது அலர் அறிவுறுத்தல் என்னும் துறை.

அலர் - (பலர் அறிந்து கூறும்) பழிமொழி. ஆரம்பத்தில் அரும்பு ; அது மலர்ந்த போது மலர் என்று ஆகும். அதுபோல், மறைவா யிருந்து, அயல் அறிய அலர்ந்த பொழுது அலர் எனப் பெறும். அலர்தல் - விரிதல். இதன் முன்னைய நிலையை அம்பல் என்பர் ; அது சிலர்க்கு மட்டும் புலனாகி, ஐயுறவாக அமைவது.

"அம்பலே பழிச்சொல் சில்லோர்
அறிந்து அலர் தூற்றல் ஆமே"

என்பது நிகண்டு.

"பழிமொழியும், பலர் அறிந்து அலர் தூற்றலும்,
மலரும் மகிழ்வும் அலரென் றாகும்"

என்பது பிங்கலந்தை.

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி"

எனும் திருமுருகாற்றுப் படைக் கருத்தை முதலடியிலும்,

"உததியிசை கடவு மரகத வருண குலதிலக
உபலளித கனகரத சதகோடி சூரியர்கள்
உதயமென யுகமுடிவில் ஒருசோதி வீசுவதும்"

எனும் சீர்பாத வகுப்பை, இரண்டாம் அடியிலும் எண்ணத் தகும்.

எல்லாம் அழிந்த பின்னும், தனக்குத் தானே சமானம் எனும்படி இருக்கும் ஞான வேலை, 'அந்தம் நிகர் அயில்' என்றார் எனினுமாம். அயிலானே எனும் விளி, அயிலான் என இயல்பு பெற்றது.

"புயம் ஆறிரண்டுக்கும் பொன்னணியாம் ; புள்ளி மான்மகட்கும்
கயமான் மகளுக்கும் கண்ணிணையாம் ; கடும் கூற்று வந்தால்,
நயமாய தொண்டர்க்கு நல்துணையாம்; செந்தில் நன்னகர்மே
வியமால் மருகன் திருக்கரத் தேந்திய வேல்படையே.

எனும் செந்தில் கலம்பகம், வேலின் பிரபாவம் விளக்கல் அறிக.

ஆய் இழை - ஆய்ந்த மணிகளைப் பதித்த அணிகலன் அணிந்தவள் எனும் பொருட்டு.

அலர் அறிவுறுத்தலை, அக நூற்கள் பலவாக அறிவிக்கும்.

" தெருவினில் நடவா மடவார்
திரண்டொறுக்கும் வசையாலே
....
புளகித முலையாள் அலையா
மனம் சலித்தும் விடலாமோ? "

எனும் திருப்புகழ், இங்கு நினைவில் எழுகிறது அல்லவா! (23)

24 தேயத் தியங்கி யலகி றலங்களிற் சென்றடிகள்
தேயத் தியங்கி யலைய றிடங்கதி சேர்தலறைந்
தேயத்தி யங்கின நித்திலந் தானெறி செந்திலடைந்
தேயத்தி யங்கி தரித்தான் றனயற் றெரிசிக்கினே.

(பதப்பிரிவு)

தேயத்து [1]இயங்கி, அலகில் தலங்களில் சென்று, அடிகள்
தேயத் [2]தியங்கி அலையல்; இடம் கதி சேர்தல்; அறைந்
தே [3]அத்தி அங்கு இனம நித்திலம்தான் எறிசெந்தில் அடைந்து,
எய்[4]அத்தி [5]அங்கி தரித்தான் தனயன் தெரிசிக்கினே.

(ப - ரை.) தேயத்து இயங்கி - நாடு முழுதும் நடமாடி ;

அலகில் தலங்களில் அடி தேயச் சென்று தியங்கி அலையல் - கணக்கிலாத தலங்களில் (உள்ளங்) கால் தேயச் சென்று, மயங்கி வருந்தாதே (மனமே)!

---

1. இயங்கி - சஞ்சரித்து. 2. தியங்கி - மயங்கி. 3. அத்தி - கடல். 4. அத்தி - எலும்பு. 5. அங்கி - தீ.

அத்தி அறைந்தே - கடல் ஆரவாரித்து ;

அங்கு இனம் நித்திலந்தான் எறி செந்தில் அடைந்து - அக்கரையோரத்தில் ஏராளமான முத்துகளைக் கரையில் எறிகிற (சிறந்த) திருச்செந்திலைச் சேர்ந்து;

ஏய் அத்தி அங்கி தரித்தான் தனயன் தெரிசிக்கினே - மன்னிய எலும்பு மாலையையும், மழுவையும் தாங்கிய மாதேவர் மைந்தரான (தற்பர) கந்தப் பரனைத் தரிசித்தால் ;

கதிசேர்தல் திடம் - முத்தி யடைதல் நிச்சயம், (எ - று).

விரிவுரை

வீணான அலைவு வேண்டா. உள்ளங்கால் வெள்ளெலும்பாக, ஊர் சுற்றல் வேண்டவே வேண்டா. புனித செந்தூர்க்குப் போ! செவ்வேள் பெருமானைச் சேவித்தல் செய்! வாழ்விக்கும் நல்ல கதி வரும் ; இது நிச்சயம் என்பது கருத்து.

" பிழையாத தொண்டர் சிறிதேசெய் அன்பு
பெரிதாக நெஞ்சம் மகிழ்வார்
உழையினும் எங்கள் குறமாது கொண்கர்
உமைபாலர் தங்கும் இடமாம் ;
புழைவாய் திறந்து வளைசூல் உழந்து
பொழியாரம் இந்து எனவே
மழைபோல் முழங்கி அலையாழி சிந்து
வளமேவு செந்தில் நகரே "

" கற்றாலும், நீடூழி கழித்தாலும்,
கழியாத கரையில் வாழ்வு
பெற்றாலும், முருகனடிக்(கு) அன்பு பெறுதவர்
உலகில் பிறவி தீரார் ;
இற்றாலும், கலி நலிய இரந்தாலும்,
பேதையராய் எழுத்தா(று) உள்ளத்(து)
அற்றாலும், அவனிருக்கும் செந்தில் என்றார்,
முந்தில் என்றும் அடைவர்தாமே "

எனவரும் செந்தில் கலம்பகக் கருத்துக்களை, இப்பாடல் கொண்டிருப்பதுணர்க. (24)

25 சிக்கத் தனங்க டிறக்கின்ற கன்னியர் சிந்தைகனே
சிக்கத் தனங்க ளளித்தழிந் தேற்கெழிற் செந்திறரி
சிக்கத் தனங்க ழலையேத்த நல்கினன் சீர்நிறைகா
சிக்கத் தனங்க ளகிலேசன் றந்த திறற்கந்தனே.

(பதப்பிரிவு)

[1]சிக்கத் [2]தனங்கள் திறக்கின்ற கன்னியர் சிந்தைகள்,நே
சிக்கத், [3]தனங்கள் அளித்து அழிந்தேற்கு, எழில்செந்தில் தரி
சிக்கத், தன் அம் கழலை ஏத்த நல்கினன்; சீர்நிறைகா
சிக் [4]கத்தன், நங்கள் [5]அகிலேசன் தந்த திறல் கந்தனே.

(ப - ரை.) *சிக்கத் தனங்கள் திறக்கின்ற கன்னியர் சிந்தைகள் நேசிக்க* - (கண்டவர்கள் தம்மிடம்) கட்டுப் படும்படி, குயங்களைத் திறந்து காட்டுகின்ற மங்கையர் மனம் விரும்பி மகிழும் பொருட்டு;

தனங்கள் அளித்து அழிந்தேற்கு - (அளவிலாத) பணங்களை (வாரி) அளித்து, (அடியோடு) அழிந்த அடியேனுக்கு;

சீர் நிறை காசிக் கத்தன் - சிறப்பு நிறைந்த காசியில் இருக்கும் செம்மாந்த தலைவரான;

நங்கள் அகிலேசன் தந்த திறல் கந்தனே - எங்கள் விஸ்வநாதர் அருளிய வல்லாளரான கந்த வள்ளல்;

எழில் செந்தில் தரிசிக்க - (தனித்த) எழுச்சி யுடைய திருச் செந்திலைத் தரிசிக்கவும்;

தன் கழலை ஏத்த நல்கினன் - (தூய) தன் திருவடிகளைத் துதிக்கவும் அருளினன், (எ - று).

விரிவுரை

அரிவையர் மையலில் அகப்பட்டேன்; இருந்த பணம் யாவும் ஒழிந்தது; ஏமாளியானேன். அருளார்ந்த ஆற்றல் அமைந்துள்ள எம் அத்தன், சேவிக்குமாறு திருச்செந்திலில் என்னைச் சேர்த்தான்; அதனுடன், துதித்து உய்யும்படி, தன் திருவடிகள் தோன்றுமாறும் செய்தான். வாழ்க அவ்வள்ளல் திருவருள் என்று வழுத்தியபடி. இப்படி முடிப்பது இசையெச்சம் எனப்பெறும். (25)

---

1. சிக்க - சிக்கும்படி; அகப்படும்படி. 2. தனங்கள் - குயங்கள். 3. தனங்கள் - செல்வங்கள். 4. கத்தன் - தலைவன். 5. அகிலேசன் - விசுவேசன்.

26 கந்தரங் கானந்த னிற்சென் றடங்கிலென் காசிக்கநே
கந்தரங் கானந்த நண்ணிலென் கன்னியர் கட்டளக
கந்தரங் கானந்த நின்று டெழிற்செந்திற் கண்டிறைஞ்சிக்
கந்தரங் கானந்த நல்கச் சனனங் கடந்திலரே.

(பதப்பிரிவு)

[1]கந்தரம் கானந்தனில் சென்று அடங்கில் என்? காசிக்கு அநே
கம்தரம் கால் [2]நந்த நண்ணில் என்? கன்னியர் கட்டு [3]அளக
கந்தரம் [4]கான் நந்த நின்று,ஆடு எழில் செந்தில் கண்டு இறைஞ்சிக்,
கந்தர் அங்கு ஆனந்தம் நல்கச், சனனம் கடந்திலரே.

(ப - ரை.) கந்தரம் கானந்தனில் சென்று அடங்கில் என் - (புனித) குகையுள்ளும் காடுகளிலும் புகுந்து, (ஐம்புலச் சேட்டை) அடங்க இருந்ததனல் யாது பயன் ?;

காசிக்கு அநேகம் தரம் கால் நந்த நண்ணில் என் - காசிக்குப் பலதரம், கால் நோக நடந்து செல்வதால்தான் பயன் யாது ?

கன்னியர் கந்தரம் கட்டு அளகம் கான் நந்த நின்று ஆடும் - வனிதையர், கருமுகில் போல் வாரி முடித்த தம் கருத்த கூந்தல், மாபெரும் மணம் கமழ இருந்து பரத நடம் பண்ணும் ;

எழில் செந்தில் கண்டு இறைஞ்சி - கம்பீரமான செந்தில் பதியைச் சேவித்து வணங்கி ;

கந்தர் அங்கு ஆனந்தம் நல்க - கந்தப் பெருமான் அப்பதியில் பேரானந்தம் பெரிது வழங்க ;

சனனம் கடந்திலரே - (அதன் மூலம், தம்) பிறவியைத் தவிர்க்க அறிந்திலரே, (எ - று).

விரிவுரை

வாழ்க்கையில் துன்பம் வளர்கிறது. அதனல், பிழைபட்ட விரக்தி பிறக்கிறது. அது காரணமாக, எடுப்பான மலைகளில் ஏறுவர் ; அவைகளில் உள்ள புனித குகைகளில் புகுவர் ; அல்லது காடுகளைத் தஞ்சமென்று அடைவர் ; உணவை மறுப்பர் ; காற்றைப் புசிப்பர் ; புலன் அடங்கக் கடுந்தவம் புரிவர் ; இவைகளால் ஒரு பயனும் இல்லை.

1. கந்தரம் - குகை. 2. நந்த - (உள்ளம் கால்) தேய. 3. அளக கந்தரம் - கூந்தலாகிய மேகம்; உருவகம். 4. கான் - வாசனை.

பாம்பு காற்றைப் பருகுகிறது; காடுகளிலும் குகைகளிலும், வளர்ந்த விலங்குகள் வாழ்கின்றன. அவைகள் அடைந்த பயன் யாது? இவர்கட்கும் அவைகட்கும் என்ன வேற்றுமை?

காசிக்குச் சென்றால், கர்மம் தொலையும்; அத்தலத்திற்கு நடந்து செல்வதால், நலம் விளையும்; இப்படி ஒரு எண்ணம் சிலர்க்கு எழுகிறது. உடனே உள்ளங்கால் தேய, ஓயாது நடக்கின்றனர். இதனால் தான் யாது விளையும்? எட்டு தரம் காசிக்குச் சென்றேன்! சிறக்கப் பலதரம் சென்று சேவித்தேன் என்று, சொல்லிக் கொள்ளலாம். அட ஆரவாரமே! இதனால் கால் நொந்ததுதான் கண்ட பலன், நிற்க, இருக்க, உறங்க நேரம் இல்லாமல், ஓயாது வானில் சக்கரவாகப் பறவை உருண்டபடியே பறக்கிறதே! இதுவரை அது என்ன கண்டது?

கட்டுக் குலையாத கன்னியர் பலர், கருமுகில்போல் கருத்த கூந்தலை வாரி முடித்தனர். அழகிய மலர்களை அணிந்தனர். கட்டு மீறிய மணம் கமழ, ஆநந்தம் பெருகி, அழகிய செந்திலில், பாவம் ராகம் தாளம் தோன்ற ஆடுகின்றனர்.

யார் இவர்கள்? ஆம், பரிபாகம் முதிர்ந்த ஆன்மப் பாவையர்கள். அவர்களைப்போல், சிறந்த திருச் செந்திலைக் கண்பெற்ற பயனாகக் கண்டு, வாய்த்த அங்கங்களின் பயனாக வணங்குவார்க்கு, சிவாநந்தம் வழங்குவன் சிவகுமரன். என்றும் தீராப் பிறவித் துயர் யாவும், அந்த அளவில் தீர்ந்து விடுமே! எளிய வழி இது, ஏன் எவர்க்கும் தெரியவில்லையோ என்று வருந்தியபடி.

"போகம் விடுத்தே தாக மெடுத்தே புவிமீதே
யோகம் விளைத்தே ஆகம் இளைத்தே உழல்வீர்காள்!
ஆகம வித்தார் மோகம் அவித்தார் அருணேசர்
கோகன கத்தாள் ஆக நினைத்தே குழைவீரே"

எனும் அருணைக் கலம்பகம், இங்கு எண்ணத் தகும். (26)

27 கடனந்தி ஞகத் ததளாடை யாயெனைக் காக்கவிற்கே
கடனந்தி நாணிறத் தாயென நாரணன் கண்டிறைஞ்செங்
கடனந்தி நாதன் றனயனற் செந்திலிற் காரிகையே
கடனந்தி ஞயகங் காதலர் தேரிற் கலிக்கின்றதே

(பதப்பிரிவு)

[1]கடம் நந்து இல் [2]நாகத்து அதள் ஆடையாய்! எனைக் காக்கல் நிற்கே கடன்; அந்திநாண் நிறத்தாய் என, நாரணன் கண்டு இறைஞ்சு எங் கள்தம் நந்தி நாதன் தனயன், நல்செந்திலின் [3]காரிகையே!
கடல்[4]நந்தின் நாயகம், காதலர் தேரில் [5]கலிக்கின்றதே.

(ப - ரை. கடம் நந்து இல் நாகத்து அதள் ஆடையாய் - மதம் கெடுதல் இல்லாத (கயாசுரன் எனும் பொல்லாத) யானையின் தோலை ஆடையாகப் போர்த்தவரே!;

அந்தி நாண் நிறத்தாய் என - செவ்வானம் நாணும் அளவு (மிகச்) சிவந்திருக்கும் திருமேனியரே என்று;

நாரணன் கண்டு இறைஞ்சு எங்கள்தம் நாதன் தனயன் - (தூய) திருமால் தரிசித்துத் துதிக்கும், எங்களுடைய நந்தி யெனும் பெய ருடைய நாதன் அருளிய நம்பனது;

நல் செந்திலின் காரிகையே - நலம் சிறந்த செந்திலில் இருக்கும் (ஆன்ம) நங்கையே!;

கடல் நந்தின் நாயகம் - கடலில் உதித்த சங்குகளின் நாயகமான வலம்புரி நாதம்;

காதலர் தேரில் கலிக்கின்றதே - (உனது முதன்மைக்) காதலர் தேரிலிருந்து முழங்குகின்றதே, (எ - று).

விரிவுரை

யானை உருவம் கொண்ட கயாசுரன், வாழும் சாதுக்களைப் பல காலம் வருத்தினன். அது பொறுக்கல் ஆற்றாத அமரர், அமல னைச் சரணம் அடைந்தனர். அதை யறிந்த கயன் அங்கும் வந்தான். சிறுவரராய் எதிர்வந்த சிவபிரானை, எடுப்பான துதிக்கையால் எடுத் தான். வாயில் இட்டான். வயிற்றுள் தள்ளினன்.

அது கண்ட அமரர் அலறினர். எடுத்து விழுங்கும் அளவு இளந் திருவிளையாடல் நடத்திய எம்மான், திடீரென்று, குதூகலம் தரும் பெருந் திருமேனி கொண்டான். கிடுகிடுத்த அசுரன் உடல் கிழிந்தது. நெடுஞ் சட்டைபோல் அவ்வுடல், பெருமான் திருமேனி

1. கடம் நந்து இல் - மதநீர் வற்றுதல் இல்லாத. 2. நாகத்து - யானையின். 3. காரிகையே - பெண்ணே. 4. நந்தின் நாயகம் - தலைச்சங்கான வலம்புரி. 5. கலிக்கின்றது - ஒலிக்கிறது.

யில் நிலைத்தது. அவ்வளவில், உம்பர் தொல்லை ஒழிந்தது. வாழ்த்தி யாவரும் வணங்கினர். இவ் வரலாற்றால், அளவிற்கு மீறி, உறுத்தார் தோலை உரிப்பவர் உமாபதி என்று உணர்கிறோம் அல்லவா!

மாலை யானதும், மேல் திசையில், சிறந்த வானம் சிவந்திருக்கும்; அதை அந்திச் செவ்வானம் என்பர் அறிஞர். அழல்வண்ணப் பரமன் திருமேனி, அதைவிடச் சிவந்த அழகுடையது.

நீளும் இவ் வரலாறுகளை நினைத்தவராய், 'நாகத்து அதள் ஆடையாய்!' 'அந்தி வான் நிறத்தாய்!' என்று, திருமால் சிவத்தை எப்போதும் இறைஞ்சி ஏத்துவார்.

காக்கும் தொழிலுடைய திருமால், என்றும் வணங்கும் சிவனார் தனயன் கந்தப் பரமன்.

கந்தப் பரனை நீ காதலித் திருப்பதை யான் அறிவேன்; நலம் மிக்க அவர், உன்னொடு பலநாள் களவியல் நாடகம் நடத்தினர்.

மும்மலப் பகைவர் மோத, அதனால் சாதுக்கள் அலறுகின்றனர். குமரா! அவர்களைக் குமைத்து வா என்று, எம்பிரான் சிவ ராஜ்ய சக்ரவர்த்தி ஏவ, போர்க்களம் நோக்கி உன் காதலர் போயினர்.

அவர் பிரிவால் அன்னம் துறந்தாய்; ஆக்கை இளைத்தாய்; உறக்கம் ஒழிந்தது; உணர்வு குலைந்தது. எவ்வளவோ சொன்னேன்; என்னை நீ ஏறெடுத்தும் பார்த்திலை.

சென்றவர் திரும்புகிறார்; அவர் வரும் தேரோசையால், நிலம் அதிர்கிறதே தெரிகிறதா? வெற்றி மிடுக்கொடு திரும்பும் அவருடைய வலம்புரிச் சங்கம், கொம் கொம்! பொம் பொம்! பம் பம்! என்று ஒலிக்கிறதே! அதைச் செவி கொடுத்துக் கேள்! கேள் என்று பாங்கி, வலம்புரி ஓசை கேட்டு, தலைவனது வருகையை அறிவிக்கும் துறை இது.

யானை வருவது பின்னே, மணி ஓசை வருவது முன்னே என்பது பழமொழி. அதுபோல் நாதன் வருவது பின்னே, அருள் நாதம் வருவது முன்னே எனும் நுட்பம் இங்கு உணரத் தகும்.

ஆன்மா - தலைவி; அறிவு - பாங்கி; செந்திலாண்டவன் - காதலன்; வலம்புரி - அருள்நாதக் கேள்வி என உணர்க. (27)

28 கணக்காக நாய்கடின் காய நிலையெனக் கண்ணியென்ன
கணக்காக நானலைந் தெய்த்தே னெழிற்செந்திற் கந்தநெற்றிக்
கணக்காக னார்தந்த நின்றனை யேயினிக் காதலினாற்
கணக்காக னாநிகர்த் தேயழி யங்கத்தின் காதலற்றே.

(பதப்பிரிவு)

[1]கணக் காகம் நாய்கள் தின் [2]காயம் நிலை எனக் [3]கண்ணி, என்ன
கணக்கு ஆக நான் அலைந்து [4]எய்த்தேன்? எழில் செந்தில் கந்த! நெற்றிக்
கண் [5]அக்கு ஆகனார் தந்த நின்றனையே, இனிக் காதலினால்
[6]கணக் [7]கா; கனா நிகர்த்தே அழி [8]அங்கத்தின் காதல் அற்றே.

(ப - ரை.) கண காகம் நாய்கள் தின் காயம் நிலை எனக் கண்ணி- கூட்டமான காகங்களும், நாய்களும் தின்னும் உடலை, (எந்த) நாளும் இருக்கும் என்று நம்பி;

என்ன கணக்கு ஆக நான் அலைந்து எய்த்தேன் - என்ன நோக்காக எளியேன் உழன்று இளைத்தேனோ தெரியவில்லையே !;

எழில் செந்தில் கந்த - கம்பீரமான திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் கந்தப் பரமா !

கனா நிகர்த்தே அழி அங்கத்தின் காதல் அற்றே - கனவைப் போல் அழியும் (அநியாய இவ்) உடல் அபிமானம் ஒழிந்து ;

நெற்றிக் கண் அக்கு ஆகனார் தந்த நின் தனையே - நெற்றிக் கண்ணும், என்பு மாலை தரித்த திருமேனியும் உடைய சிவனார் அருளிய உம்மையே ;

இனி காதலினால் கண கா - இனி கட்டுமீறிய ஆர்வத்தால் தியானிக்கும்படிச் செய்து, (கதியற்ற என்னைக்) காத்தருளும், (எ-று).

விரிவுரை

என்றாயினும் அழியும் உடல் இது. அழிந்த பின், காக்கைகள் கொத்தித் தின்னும் ; நாய்கள் பிடுங்கித் தின்னும்.

" காகமோடு அலகை கழுகு நாய் நரிகள் சுற்று
சோறிடு துருத்தி யான "

---

1. கணம் - கூட்டம். 2. காயம் - உடல். 3. கண்ணி - எண்ணி.
4. எய்த்தேன் - சோர்வடைந்தேன். 5. அக்கு ஆகனார் - என்பு மாலையார்.
6. கண - எண்ணியிருக்கும்படி. 7. கா - காப்பாற்றும்.

இது, உருக்குலைந்து ஒழியும் என்று உணராமல், என்றும் மெய்யா யிருக்கும் என்று, எண்ணி யிருந்தது எவ்வளவு பேதைமை ?

" பாலனென பருவம்போம், பன்னுகுமாரப் பருவம்போம்,
கோலமான தருணம்போம், கோலை யூன்றிக் குனிந்தெழுந்து
காலன் மாய்க்க, அனைவர்களும் கல்லென்றழுது பேர்மாற்றி,
ஏலப் பிணமென் றொருபெயரிட்(டு) இடுகாட் டிடுதல்
ஒரு தலையே "

என்றபடி, அங்கங்களின் வளர்ச்சியும் தளர்ச்சியும், கனவுபோல் தோன்றிக் கழியும் காயம் இது.

இதன்மேல் அபிமானம் இல்லாதபடியும், காதல் மிகுந்து உன்னையே கருதும்படியும் செய்து, செந்தில் கந்தசுவாமி! எளிய என்னைக் காப்பாற்றி யருளும் என்பது கருத்து.

காகம் - கா கா என்று கரைதலிற் போந்த பெயர். காயமற்ற ஆக்கையை, காயம் என்றல் மங்கல வழக்கு.

கண்ணி - அழுத்தமாக நம்பி. கண்ண என்றது கண என இடைகுறைந்து நின்றது; கண்ண - இடையறாத தியானம் பெற. கா - ஓரெழுத் தொருமொழி ; காத்தருள் எனும் பொருட்டு. (28)

29 காதலை யானின் றனக்காக் கினனினிக் காயந்தந்தே
காதலை யானின் றனக்கா ரணனடிக் கஞ்சங்கணீங்
காதலை யானின் றகங்கரைந் தேத்தரன் கண்ணியராக்
காதலை யானின்ற சங்கரன் சேய்செந்திற் காங்கெயனே.

(பதப்பிரிவு)

காதலை யான் நின்றனக்கு ஆக்கினன; இனிக் காயம் தந்தே
[1]காதல்; [2]ஐயான், [3]இன்தன காரணன், அடிக்கஞ்சங்கள் நீங்
காது, [4]அலையான் நின்று அகம் கரைந்து ஏத்து அரன்;கண்ணி
அராக்
காது அலையா நின்ற சங்கரன் சேய்; செந்தில் காங்கெயனே.

(ப - ரை.) ஐயான - (அணுவுள்) அணு ஆனவனும் ;

இன் தன காரணன் - (கனிந்த) இனிய அருட் செல்வ காரண னும் ;

1. காதல் - சாகச் செய்யாதே. 2. ஐயான் - மதிநுட்பம் ஆனவன். 3. இன் தனம் - இனிய அருட்பேறு. 4. அலையான் - அலைகளை யுடைய பாற் கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமன்.

அலையான் அடிக் கஞ்சங்கள் நீங்காது நின்று அகம் கரைந்து ஏத்தும் அரன்-(திருப்பாற் கடலில் திருப்பள்ளி கொள்ளும்) திருமால், (தமது) திருவடிக் கமலங்களை இடைவிட்டு அகலாமல் இருந்து, உள்ளம் உருகித் துதிக்கும்படி யிருக்கும் அரனும்;

அராக் கண்ணி கர்து அலையா நின்ற சங்கரன் சேய் - பாம்பு மாலை திருச்செவியில் ஊசலாடுகிற திருக்கோலம் உடையவருமான சிவனார் அருளிய முருகா!

செந்தில் காங்கெயனே - திருச்செந்தூரில் எழுந்தருளி யிருக்கும் கங்கை தநயா!

காதலை யான் நின்தனக்கு ஆக்கினன் - இருக்கும் விருப்பம் அனைத்தையும், அடியேன் உம்மீதே வைத்துளேன்;

இனி காயம் தந்தே காதல் - (இந்நிலையில்) மேலும் ஒரு பிறப்பை யளித்து, (மீட்டும்) இறப்பிக்க வேண்டா, (எ - று.)

விரிவுரை

' அணுவுள் அவனும் அவனுள் அணுவும்
கணுவற நின்ற கலப்பு '

என்பது சித்தாந்தம். பரமாணு என்பது, பரமனுக்கு ஒருபெயர்.

ஐயான் சேயே! காரணன் சேயே! அரன் சேயே! சங்கரன் சேயே! காங்கேயனே! உம்மையன்றி, அடியேற்கு வேறு ஒருபற்றும் இல்லை.

பற்றற்றான் தாளைப் பற்றினால், உள்ள பிறபற்று ஒழியும் என்பர். புனித உம்மிடமே அடைக்கலம் புகுந்தேன். அநியாய எப்பிறப்பையும் அளிக்க வேண்டா! அப்படிச் சார்வித்த தேகத்தி லிருந்து, எனைச் சாய்விக்கவும் வேண்டா என்று, கண்ணீர் சிந்திக் கதறியபடி.

காங்கேயன் - சிவனார் கண்களி லிருந்து எழுந்த அருட் பொறிகள் ஆறையும், தனிப்பெரும் கங்கை, தன் அலைக் கைகளால் தாங்கினள்; அன்று முதல், கங்கை தநயன் எனும் பொருளில், பெருமான் காங்கேயன் எனும் பெயர் பெற்றான். (29)

30 காயங் கலைய நலியந் தகனணை காலஞ்செய்ய
காயங் கலையத ளானில நீரழல் காற்றெழிலா
காயங் கலையன லிசித் தாயினன் காதலழ
காயங் கலையதி ருஞ்செந்தி லாயென்க கன்றனெஞ்சே.

(பதப்பிரிவு)

[1]காயம் கலைய நலி அந்தகன் அணை காலம், செய்ய
[2]காயம், [3]கலை அதளான், நிலம் நீர் அழல் காற்று எழில்ஆ
காயம், [4]கலையன் [5]அலரி [6]சித்து ஆயினன் காதல்[7]அழ
குஆய்[8], அங்கு அலை அதிரும் செந்திலாய் என்க கன்றல் நெஞ்சே!

(ப - ரை.) காயம் கலைய நலி அந்தகன் அணை காலம் - உடல் உருக்குலைய வருந்துகின்ற இயமன் வரும் பொழுது;

கன்றல் நெஞ்சே - அஞ்சாதே மனமே!

செய்ய காயம் - (சாக்கிய நாயனார் கல்லால் அடித்த) சிவந்த தழும்பைக் கொண்டவரும்;

கலை அதளான் - கலைமான் தோலை உடுத்தியவரும்;

நிலம் நீர் அழல் காற்று எழில் ஆகாயம் கலையன் அலரி சித்து ஆயினன் - மண், நீர், நெருப்பு, காற்று, அழகிய விண், சந்திரன், பரிதி, ஆன்மா எனும் எட்டுப் பொருள்களில் இருப்பவருமான சிவபெருமான் (அருளிய);

காதல் அழகு ஆய் - காதல் முருகனைக் கருதி யிரு!

அங்கு அலை அதிரும் செந்திலாய் என்க - ஆரவாரிக்கும் அலைகளையுடைய (கடற்கரை அண்மைச்) திருச் செந்தூர்த் தேவா என்று (கூடிய அன்பொடு) கூவி யழை, (எ - று).

விரிவுரை

காயம் என்பது, என்றும் காயமா யிருக்குமா என்ன? வரவர வயிறு சரியும்; வந்தேன் என்று நரை வரும்; பற்கள் ஆட்டம் காட்டும்; கும்மென்று இருந்த முதுகு கூனடையும். அதன்பின், தடியூன்றித் தள்ளாடல். ஒரு மல்லாறல் உய்யலாம். இரவும் பகலும் இருமல் வேதனை. சொல் குழறும்; இனிய கண்கள் இருளடையும். சிறந்த செவிகள் செவிடாகும். பலவகை நோய்கள், பாயில் படு! படு என்று படுக்க வைக்கும்.

---

1. காயம் - உடல். 2. காயம் - தழும்பு. 3. கலை அதளான் - மான் தோல் உடுத்தோன். 4. கலையன் - (பதினாறு) கலைகளை யுடைய சந்திரன். 5. அலரி - சூரியன். 6. சித்து - ஆன்மா. 7. அழகு - அழகை; முருகை; முருகனை. 8. ஆய் - தியானம் செய்.

ஆ! சேயாக இருந்தபோது, நாலால் தவழ்ந்தோம். பிறகு இரு காலால் நடந்தோம். தடியூன்றிய காலத்தில், மூன்றால் தள்ளாடினோம். மேல் மூச்சு வாங்க, அந்த ஏணியில் ஏறி, இப்போது எமபுரம் போகச் சித்தமாக இருக்கிறோம்.

வயது வகையில் எண்ணினால், பத்தில் பதற்றம்; இருபதில் இடக்கு; முப்பதில் முடுக்கு; நாற்பதில் நரை; ஐம்பதில் அறிவு; அறுபதில் சொறி, எழுபதில் ஈளை; எண்பதில் எண்ணல்; தொண்ணூறில் தூங்கல்: நூறில் வாங்கல். ஆ! நூறு என்பதும், இன்றைய உலகில் நூலளவு ஆயது. என்ன வேதனை! பழைமையை எண்ணிப் பதைக்கிறது மனம்.

இந்நிலையில், வந்தேன் நானும் என்று இயமன் வருகின்றான். என்ன பயங்கரம்! அவனைக் கண்ட அதிர்ச்சியில், குடலில் இருக்கும் மலமும் நீரும், குபுக்கென்று கொட்டுகின்றன.

வீடு, போ! போ என்பதுபோல் ஒரு தோற்றம்; சுடு காடு, வா! வா என்பது போல் ஒரு காட்சி.

ஐயோ! எண்சாண் உடலில் இத்தனை நாள். இரண்டு நெடும் கொம்பு; ஏழு குறுக்குப் புள்; இப்படி ஒரு பாடை; அதன் மேல் இனி ஏற வேண்டுமே? என்று, அலறுகின்றது ஆன்மா.

இந்நிலையில், அஞ்சாதே நெஞ்சே! என்று ஆறுதல் குரல் ஒன்று எழுகிறது.

நிமல முருகனை நினை! திருச்செந்தில் தெய்வமே என்று, கூம்பிய உணர்வொடு கூவிக் குரல் கொடு! போதும். இயம பயம் ஒழியும். எம்மான் சந்நிதியில் இன்புற்றிருப்பை!

இது நினைவில் இருக்கட்டும்!

என்றும் கந்தனை எண்ணி யிருந்தால், செந்தில் செல்வமே! என்று, நாள்தோறும் ஏத்தி யிருந்தால், பழக்க வாசனையால், இறுதி நாளில் அந்த எண்ணம் வரும்! ஏத்தும் நினைவு இனிது வரும்.

அதன்பின், அமைதியின்ப ஆன்ம அனுபவம், தெளிந்த நிலையில் தெரியவரும்.

கனிந்த அன்பர் ஒருவர், உச்சிமேற் புலவர்கொள் கச்சியில் இருந்தார். அவர் புறத்தில் பௌத்தர்; அகத்தில் சைவர்; சாக்கியர் எனும் பெயரினர்.

ஒரு மரத்தின் அடியில், எடுப்பான ஒரு சிவலிங்கம் இருந்தது. புத்த மதத்தர் புளகிக்க, அவர் ஒரு கல்லை எடுப்பார். அமல லிங்கத்தை அடிப்பார். அதன் பிறகே உணவு கொள்வார்.

இது, நீடித்த அவர்தம் நியதி.

கல்லால் அடிக்கும் போதெல்லாம் அவர் மனம், அக்கல்லை மலராகக் கருதியது. அடித்த பின், கசிந்து கண்ணீர் சிந்தியது.

ஒரு நாள் அடிக்க மறந்தார். உணவு உண்ண அமர்ந்தார். நியதி உடனே நினைவில் எழுந்தது. பசியை மறந்தார். எழுந்து ஓடி வந்தார். கல்லை எடுத்தார். அடிக்க முயன்றார்.

அவர் அன்பு கண்ட அமலர், விடைமேல் அமர்ந்து வெளிப்பட்டார்.

அன்பனே! இது, நீ கல்லால் அடித்த தழும்புகாண்! உனது அன்பை எவரும் உணர, என்றும் இத்தழும்பு, எம் திருமேனியில் இருக்கும்!

இனி மேல், நீ, என்றும் எம்மிடம் இரு என்றார். அவர் அருளால், சாக்கிய நாயனர், என்றுமுள சிவலோக இன்பம் கண்டார்.

அன்பின்றி, அடியவரை ஒறுத்தார் தோலை உரித்த பெருமான், அன்பர்க்கு அருள யாமுளம் எனலை அறிவிக்கும் பொருட்டு, யானைத் தோல், புலித்தோல், மான்தோல் முதலியவைகளை, போர்வையாகவும், ஆடையாகவும் புனைந்துளர்.

மேலும், மண்ணில் திண்மையானார்; நீரில் சுவையானார்; தீயில் வெம்மையாய்த் திகழ்கின்றார்; காற்றில் தன் ஊக்கம் காட்டுகின்றார். விண்ணில் கலப்பாய் விளங்குகின்றார்; மதியில் அமுதமாக மலிந்தார்; பரிதியில் ஒளியாய்ப் பரவுகிறார்.

உயிர்க்குள் உயிரா யிருந்து உணர்த்துகின்றார்.

இந்த எட்டுப் பொருள்கட்கு அயலாய் உலகில்லை; இவைகள் எட்டிலும் இருந்து, பேறுதரும் அட்டமூர்த்தி என்ற பேரும் உடையவர் அந்தப் பெருமானர்.

> " எட்டுக் கொண்டார்தம்மைத்
> தொட்டுக் கொண்டே நின்றார்
> விட்டார் உலகம் என்று உந்தீபற
> வீடே வீடாகும் என்று உந்தீபற "

என்று, இந்நிலையைப் பாடுகின்றார்கள் பரம யோகிகள்,

சிறந்த தழும்புள திருமேனிச் சிவ குமரா !
அதளாடை புனைந்த அமலர் மைந்தா !
அட்ட மூர்த்தர் காதலிக்கும் அழகு முருகா !
அருமைக் கடலோரத்து அரசே !

இப்படி இறுதி நாளில் விளிப்பார்க்கு, இயம பயம் இல்லை என்பது குறிப்பு.

அழகு - அழகை; முருகை; ஆய் - தியானித்தல் செய். மேலும், அழகு - முருகு; அழக்கா - முருகா எனினுமாம் ; முதன்மைச் சிவனார் அன்பு கொண்ட முருகா என்றபடி.

" புலன் ஐந்தும் பொறிகலங்கி, நெறிமயங்கி,
அறிவு அழிந்திட்டு, ஐம்மேல் உந்தி,
அலமந்த போதாக, அஞ்சேல் என்று
அருள் செய்வான் அமரும் கோயில் "

எனும் திருமுறையையும்,

" காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல்விழுந்தே
உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு "

என்ற பட்டினத்தார் பாடலையும்,

' சலம்காணும் வேந்தர் தமக்கும் அஞ்சார்; யமன்
சண்டைக்கு அஞ்சார் ;
துலங்கா நரகக் குழியணுகார்; துட்ட நோயணுகார்;
கலங்கார் புலிக்கும் கரடிக்கும் யானைக்கும்; கந்தன் நன்னூல்
அலங்கார நூற்றுள் ஒருகவிதான் கற்று அறிந்தவரே '

எனும் அருணை முனிவர் அருள் வாக்கையும், இங்கு அறிதல் தகும்.

திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி
நிறைவுபெற்றது.

மாபெரும் திருச்செந்தில் ஆண்டவன்
மலரடிகட்கே அடைக்கலம்.

ஓம்